# செங்குந்த மித்திரன்

மலர்:21 இதழ்: 5 | மே – 2021 | Date of Publication 25th day of Every month | தனிப்பிரதி விலை: ₹ 15/–



செங்குந்தர் குலச் செம்மல் 'பத்மஸ்ரீ'
டாக்டர் P.K.கோபால் செங்குந்தர்



*வாழ்க வாழ்க செங்குந்தர்!*

*வெல்க வெல்க செங்குந்தம்!!*

# செங்குந்தர் உறுதிமொழி

**நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.**

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.

2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.

3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.

4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.

5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

# தலைவர் மடல்

செயலை விதைத்தால் பழக்கம் உருவாகும்,
பழக்கத்தை விதைத்தால் பண்பு உருவாகும்,
பண்பை விதைத்தால் நமக்கு நல்ல எதிர்காலம் உருவாகும்
என்ற நல்லெண்ணத்துடன் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும்
செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்..

தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிழக்கில் உதிக்கும் ஆதவன் போல் உறக்கம் கலைந்து துள்ளி எழு. புது மலராய் பூத்து நம்முடைய இலக்குகளை நோக்கிப் பயணப்பட்டால் இமயம்கூட நம்முடன் வரும்.

ஜூன் 25 அன்று சிவத்திரு J.சுத்தானந்தன் மற்றும் ஜூன் 27 அன்று பத்மஸ்ரீ M.P.நாச்சிமுத்து செங்குந்தர் ஆகியோரது நினைவு நாளை நம் இல்லங்களிலிருந்தே நினைவு கூர்வோம்!

சில காலங்களை நாம் பொற்காலம் என்று சொன்னதுண்டு. இன்று நடப்பதோ கொரோனா காலம். சென்ற ஆண்டு தொடங்கி இன்றும் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது. நம்மை வீட்டுச் சிறையில் வைத்துள்ள இந்தக் காலத்தை எண்ணிப் பார்க்காமல், வருங்கால சந்ததியினர் இருக்க முடியாது. ஆம், நமக்கு இறைவன் தந்த தண்டனை. நாம் இயற்கையை அழித்ததன் பயனை இப்போதும் உணர முடியவில்லை என்றால் இனி வருங்காலம் நமக்கு எதுவும் செய்யாது, நாம் தப்பிக்க முடியாது.

கொரோனா எனும் கொடூர தொற்றே!
எங்கள் வாழ்வில் நுழைந்தது போதும், ஓடிவிடு!
இனி என்றும் எங்கள் எங்கள் கண்ணில் படாதே!

அன்புடன்

KPK செல்வராஜ்






## வைத்தீஸ்வரன் கோவில் என்றழைக்கப்படும்
# திருப்புள்ளிருக்குவேளூர்

பிறவிப் பிணியைப் போக்கும் சிவபெருமான் இக்கோவிலில் வைத்தியநாதர் என்ற பெயருடன், மக்களின் உடல் பிணிகளையும் போக்குகிறார். இத்தலத்திலுள்ள இறைவன் வைத்தியநாதரையும் இறைவி தையல்நாயகியையும் வேண்டி தொழுதால், எல்லாவகை வியாதிகளும் தீர்ந்துபோகும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.

புள்ளிருக்குவேளூர் எனப் பாடல் பெற்ற இத்தலம், இன்று பொதுவாக வைத்தீஸ்வரன் கோயில் என்று அழைக்கப்பெறுகின்றது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானதும், தேவாரப்பாடல் பெற்ற சோழநாட்டுக் காவிரி வடகரைத் திருத்தலங்களில் 16–வது சிவத்தலமாகவும், நவக்கிரக ஸ்தலங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது வைத்தீஸ்வரன்கோயில்.

### தலப் பெயர்க்காரணம்:

புள் (ஜடாயு). இருக்கு (ரிக்வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) ஆகிய இந்நால்வரும் பூசித்ததால் புள்ளிருக்கு வேளூர் எனும் பெயர் கொண்டது. மற்றும் சடாயு புரி, கந்தபுரி, வேதபுரி என்றும் அங்காரகன் வழிபட்டமையால் அங்காரகபுரம் என்றும், அம்பிகையைப் பூசித்தமையால் அம்பிகாபுரம் எனவும் அழைக்கப்பெறும். வினைதீர்த்தான்



வைத்தீஸ்வரன் கோயில் அருள்மிகு வைத்தியநாத சுவாமி



அருள்மிகு தையல்நாயகி அம்மன்

கோயில், தையல்நாயகி கோயில் மற்றும் வழக்கில் உள்ள வைத்தீஸ்வரன்கோயில் எனப் பல பெயர்களும் உண்டு.

## தலப்பெருமை:

முருகன் சூரபத்மனை வெல்ல வேல் வாங்கிய தலம் இது. இறைவன் 4448 நோய்களையும் அதோடு ஊழ்வினைகளையும் தீர்க்கவல்ல வைத்தியநாதராய் எழுந்தருளி யுள்ளார். அவருக்கு உதவியாய் அம்பாள் கையில் தைல பாத்திரமும், அமிர்த சஞ்சீவியும், வில்வமரத்தடி மண்ணும் ஏந்தி வர, இருவரும் தீராத நோய்களையும், வினைகளையும் தீர்த்து வைக்கும் வேதியத் தம்பதிகளாகின்றனர். இத்தலத்தில் அடி வைப்பதால் பில்லி சூனியம் முதலானவையும் கூட அகலும் என்பர்.

## கோயில் அமைப்பு:


நான்கு கோபுரங்களுடனும் உயர்ந்த மதில்களோடும் கூடிய கோயில். மேற்கு நோக்கிய இறைவன் சந்நிதி கொண்டது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது.

*தெற்கில் கணேசன் திகழ்மேற்கில் பைரவரும்*
*தொக்கவடக்கில் தொடர்காளிமிக்க கிழக்கு*
*உள்ளிருக்கும் வீரனையும் உற்றுப்*
*பணிந்துய்ந்தேன் புள்ளிருக்கு வேளூரிற்போய்.*

எனும் பாடலின் மூலம் வைத்தியநாத ஸ்வாமி ஆலயத்தைத் தெற்கில் கணபதியும்,மேற்கில் பைரவரும், வடக்கில் காளியும், கிழக்கில் வீரபத்திரரும் காவல் புரிகின்றனர் என்று அறியலாம்.

## தீர்த்தம்:

கோயிலுக்குள் விளங்கும் சித்தாமிர்த்த தீர்த்தம் விசேஷமானது. நான்கு புரங்களிலும் மண்டபத்தோடும் படிக்கட்டுகளோடும் நடுவில் நீராழி மண்டபத்தோடும் விளங்குகின்றது. இங்கே கிருத யுகத்தில் காமதேனு இறைவனைத் தன் முலைப்பால் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிய சம்பவம் நிகழ்ந்தது. அதுவே புனித தீர்த்தமாக பெருகி இங்கு அமைந்ததென்பர். இதன் காரணமாக கோக்ஷீர தீர்த்தம் என்று பெயர் பெறலாயிற்று.



சதானந்த முனிவர் இங்கு தவம் செய்து கொண்டிருந்தபோது பாம்பால் துரத்தப்பெற்று தவளை ஒன்று தண்ணீரில் குதித்து அவர் தவத்தை கலைத்தது. முனிவர் குளத்தில் பாம்பும் தவளையும் வாசஞ் செய்யக்கூடாது என்று சபித்ததால் இக்குளத்தில் தவளைகள் வசிப்பதில்லை என்பர்.

இத்திருக்குளத்தில் குளித்தெழுந்தால் சகல நோய்களும் தீரும் என்பது திண்ணம். நோய்தீரக் குளத்தில் வெல்லம் கரைத்து விடுவதும் பிரகாரத்தில் உள்ள மரப்பெட்டியில் உப்பு, மிளகு இரண்டையும் கலந்து கொட்டுவதும் இன்றும் உள்ள ஒரு பிராத்தனை வழக்கம். சித்தாமிர்த்த தீர்த்தம் தவிர கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வ தீர்த்தம், அங்கசந்தனத் தீர்த்தம், முனிவர் தீர்த்தம் என்று வேறு தீர்த்தங்களும் இங்கு உள்ளன.

## மூர்த்திகள்:

சுவாமி பெயர் ஸ்ரீவைத்தியநாதன், வைத்தீஸ்வரன், அம்பாள் பெயர் ஸ்ரீதையல்நாயகி, முருகன் செல்வமுத்துக் குமரன் எனும் பெயரோடு விளங்குகின்றார். கோளிலித்தலம் (நவகிரகங்களின் குற்றங்களை நீக்கி அருள்புரியும் தலத்திற்கு கோளிலித்தலம் என்று பெயர்.) என்று அழைக்கப்படும் வைத்தீஸ்வரன் கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரமில்லாமல் வரிசையாக


## திருச்சாந்துருண்டை

வைத்தியநாதப் பெருமானின் பிரசாதமாக நோய் நீங்கும் பொருட்டு அளிக்கப்பெறுவது திருச்சாந்துருண்டை. ஆலயத்தில் விபூதி குண்டத்தில் (ஜடாயு குண்டத்தில்) உள்ள விபூதியையும் சித்தாமிர்த தீரத்த நீரையும் சேர்த்துக் குழைத்து, ஐந்தெழுத்து மந்திரமாகிய 'நமசிவாய' என்பதனை ஓதிக்கொண்டே முத்துக்குமார சுவாமி சந்நிதியில் உள்ள குழியம்மியில் அரைத்து உளுந்தளவில் உருட்டி, அம்பாள் திருவடியில் வைத்து அர்ச்சித்து எடுத்துச் சேகரித்து வைத்துக் கொண்டு வேண்டியவர்களுக்கு அந்த உருண்டை வழங்கப் பெறுகின்றது. இதனை உண்டோர் நோய் (தீவினை) நீங்கி வாழ்வாங்கு வாழ்ந்து, பின் முக்தி எய்துவர் என்பது நம்பிக்கை.

இங்கு அர்த்த சாமப் பூஜை செல்வ முத்துக்குமார சுவாமிக்குச் செய்த பின்புதான் ஸ்வாமிக்குச் செய்யப் பெறுகின்றது. அர்த்தசாமப் பூஜையின்போது முத்துக்குமார சுவாமிக்கு அணிவிக்கப் பெறும் சந்தனமான 'நேத்திரிப்படி' சந்தனமும் வேண்டிய வரம் தரவல்ல மகிமையுடையது. இந்தச் சந்தனத்தை 'புழுகாப்பு' என்பர்.



சித்தாமிர்த்த தீர்த்தம்



அருள்மிகு முத்துக்குமாரஸ்வாமி

ஈஸ்வரன் சந்நிதிக்கு பின்புறம் நோய்கள் தீர வேண்டி பிரார்த்தித்திருக்கும் காட்சியைக் காணலாம்.

## செவ்வாய் பரிகாரத் தலம்:

அங்காரகனின் செங்குஷ்டநோயைத் தீர்த்தபடியால் அங்காரகத் தலமாகின்றது. அங்காரகனுக்குத் தனிச் சந்நிதி உண்டு. மூல விக்கிரகத்தோடு உற்சவ விக்கிரகமான அங்காரகனும் உண்டு. இரண்டும் தனித்தனிச் சந்நிதிகளாக உள்ளன. அங்காரக தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுவதால் தோஷம் நீங்கப் பெறுவர். நவக்கிரகங்களுக்கு அடுத்தாற்போல் 63 நாயன்மார்கள், ஸப்த கன்னியர் ஆகியோரையும் மற்றும் ஆயுர்வேதத்தின் தலைவனான தன்வந்திரி சித்தர் விஷ்ணு ஸ்வரூபத்தில் அமர்ந்திருக்கும் வடிவத்தையும் காணலாம். துர்க்கை மற்றும் சஹஸ்ர லிங்கமும் விசேஷமானவை.

## சடாயு குண்டம்:

சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, அதனைத் தடுத்த ஜடாயுவின் சிறகுகளை இராவணன் வெட்டி வீழ்த்தினான். பின்னர் இராமன் அவ்வழியில் சீதையைத் தேடி வந்த நேரத்தில், நடந்தவற்றைச் சொல்லிய ஜடாயு இராமனது காலடியில் உயிர்த்துறந்தான். இராமபிரான் ஜடாயுவின் வேண்டுகோள்படி சிதையடுக்கி அவனது உடலைத் தகனம் செய்த இடம் 'ஜடாயு குண்டம்' என்று அழைக்கப் பெறுகின்றது.

இன்றும் இக்குண்டத்தில் உள்ள திருநீற்றினை அணிந்தால் தீராத நோய்களும் தீரும் எனும் நம்பிக்கை உண்டு. ஜடாயு குண்டத்திற்கு அருகில் ஜடாயு மோட்சத்தைச் சிலை வடிவில் காணலாம். ஜடாயு உற்சவ மூர்த்தியாகவும் இருக்கின்றார்.



## தல விருட்சம்:

கிழக்குக் கோபுர வாயிலில் உள்ள வேம்பு தல விருட்சமாகும். இதனை 'வேம்படிமால்' என்கின்றனர். ஆதிவைத்தியநாதபுரம் இதுதான் என்பர்.

## திருவிழாக்கள் :

நாள்தோறும் 6 கால பூஜைகள் உண்டு. பங்குனியில் பிரம்மோற்சவம் நடைபெறும். அதில் ஐந்தாவது நாளன்று செல்வமுத்துக்குமரன் வைத்தியநாதரைப் பூசித்துச் செண்டு பெறும் காட்சி மிக அற்புதமான ஒன்று. உற்சவகாலத்தில் கயிலையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியிருப் பது போல் சுவாமி ஒரு புறமும், அம்பாள் ஒரு புறமுமாக எழுந்தருள, செல்வமுத்துக்குமார சுவாமி நடுவில் எழுந்தருள்வார்.

மாதந்தோறும் வரும் கார்த்திகைவிழா இங்குச் சிறப்பானது. இந்நாளில் செல்வமுத்துக்குமார சுவாமிக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்க மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவர். அபிஷேகங் களில் சந்தன அபிஷேகம் மிகவும் சிறப்புடையது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் மாதந்தோறும் கார்த்திகையன்று எழுந்தருள, அவர்கள் திருமுன்னிலையில் இந்த அபிஷேகம் நடைபெறுவது கண் கொள்ளக் காட்சி. அங்காரக பரிகாரத்தல மாதலால் செவ்வாய்க்கிழமைகளில் அங்காரகர் பிரகாரத்தில் வலம் வருவார். கார்த்திகை மாத சோம வாரங்களில் ஈசுவரனுக்குச் சங்காபிஷேகமும் உண்டு.

திருஞானசம்பந்தர் இத்தலத்தைப் பற்றிப் பதிகம் ஒன்று பாடியுள்ளார். திருநாவுக்கரசர் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். தருமையாதீனம் 10வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமி அருளிய



அருள்மிகு செவ்வாய் பகவான்(அங்காரகன்)

செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பாவும் குமரகுருபரர் அருளிய பிள்ளைத் தமிழும் இத்தலம் பற்றிய அழகு தமிழ்ப் பாடல்கள்.

"தையல்நாயகியைத் தொழுது எழுவார் தொங்கத் தொங்கத் தாலி அணிவார்". வைத்தியநாதனைப் போற்றி எழுவாருக்கு அவனே மந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்த்து வைப்பான். பிறவிப் பெரும்பயனையும் தேடித்தருவான்.

## வழித்தடம் :

சீர்காழியிலிருந்து 7 கி.மீ. தூரத்திலும், சிதம்பரத்திலிருந்து 24 கி.மீ. தூரத்திலும், கும்பகோணத்திலிருந்து 50 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. சிதம்பரம் – மயிலாடுதுறை இரயில் பாதையில் வைத்தீஸ்வரன் கோயில் ரயில் நிலையம் அமைந்துள்ளது. இரயில் நிலையத்திலிருந்து 1கி.மீ. தூரத்தில் கோவில் உள்ளது.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் நடராசன்

# திங்கள் ஒரு திருக்குறள்

வாய்மையே வெல்லும்



பெரியாரைத் துணைக்கோடல்

(அறிவு ஒழுக்கம் வயது முதிர்ந்த பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல்)

**442**



**உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

தமக்கு வரும் துன்பத்தை நீக்கி,மீண்டும் அத்துன்பம் வரவிடாமல் முன்கூட்டியே காக்கவல்ல பெரியவரை,அவர் மகிழ்வன செய்து, அவரைத் துணையாகக் கொள்க.

## திருக்குறள் கதை

கதை: பேராசிரியர் கா.முருகேசன், சென்னை

ஒரு குளத்தில் அம்மா மீனும் அதனுடைய குட்டி மீனும் இருந்தன. அம்மா மீன் குட்டி மீனுக்கு நீந்த கற்றுக்கொடுத்தது. நாளாக ஆக அம்மா மீனுக்கு வயதானதால், அதனால் வேகமாக நீந்த முடியவில்லை.

ஆனால் குட்டி மீனோ அதி வேகமாக நீந்த ஆரம்பித்தது. அதனால் அதற்கு கர்வம் ஏற்பட்டது. அம்மா மீனை கிண்டல் செய்தது. உன்னால் உன் உணவை பெறக்கூட நீந்த முடியவில்லை, ஆனால் என்னைப்பார், எவ்வளவு அழகாக நீந்துகிறேன் என டைவ் எல்லாம் அடித்து நீந்தியது. அம்மா மீன் சொல்வது எதையும் குட்டி மீன் கேட்பதில்லை.

ஒருநாள் மீன் பிடிப்பவன் ஒருவன் மீன் பிடிக்க தூண்டிலுடன் வந்தான். கரையில் அமர்ந்து சிறு புழுவை தூண்டிலில் மாட்டி குளத்தில் வீசினான்.

புழுவைத் தூண்டிலில் பார்த்ததும் அதை பிடித்து உண்ண குட்டி மீன் விரைந்தது. உடனே தாய் மீன் அதனிடம் போகாதே அது உன்னைப் பிடிக்க வைக்கும் தூண்டில், அதில் மாட்டினால் நீ இறந்து விடுவாய் என்றது.

உனக்கு முடியாததால் எதைப்பார்த்தாலும் நீ சந்தேகப்படுகிறாய், அந்தப் புழுவை நான் பிடித்து வருகிறேன் பார் என்றது குட்டி மீன். அதற்குள் வேகமாக வந்த வேறொரு மீன் தூண்டிலைக் கவ்வி அதில் மாட்டிக்கொண்டு உயிரிழந்தது.

பயத்துடன் குட்டி மீன் தாயைப் பார்த்தது. பின் அம்மா நீ சொன்னது உண்மை. உன் பேச்சைக் கேட்காமல் நான் தூண்டிலைக் கவ்வியிருந்தால் அந்த மீனுக்கு ஆன கதியே எனக்கும் ஆகியிருக்கும். உன்னால் என் உயிர் காப்பாற்றப்பட்டது என அம்மா மீனிடம் மன்னிப்புக் கேட்டது.



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் 29.04.2021 காலை 11.00 மணியளவில் திருவாரூர் வள்ளல் சபாபதி, பத்மஸ்ரீ M.P.நாச்சிமுத்து, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் பிறந்தநாள் மற்றும் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கம் தோற்றுவித்த நாள் மற்றும் செங்குந்த மித்திரன் வெளியீடு ஆகிய ஒருங்கிணைந்த விழா எளிமையாக வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது



திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை நகரத்தின் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. நகரத் தலைவர் A.R.சுப்ரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒன்றியத் தலைவர் R.G.விஜயன், ஒன்றியச் செயலாளர் P.V.பார்த்தீபன் ஆகியோர் முன்னிலை வகிக்க, சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட செயலாளர் P.N.மாணிக்கம், முன்னாள் மாவட்டசெயலாளர் N.K.நரசிம்மன், தலைமையாசிரியர் E.K.உதயசூரியன், மாவட்டத் தலைவர் M.R.தங்கவேல் ஆசிரியர் (ஓ), O.K.சிவா, M.R.S. வேலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். D.A.மணி நன்றிகூற விழா நிறைவடைந்தது.

# வாழ்த்துகின்றோம்

10 மீட்டர் ஏர்ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில், உலகின் முதல் இடத்தில் இருக்கும் நமது செங்குந்தர் குல தங்கமங்கை செல்வி **இளவேனில் வாலறிவன்** அவர்கள் இந்த ஆண்டு ஜூலை மாத இறுதியில், ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள இந்தியாவின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக விளையாடி, இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும், நம் செங்குந்த குலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக வாழ்த்துகின்றோம்.




## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்**

| | | |
|---|---|---|
| செங்குந்தர் மாளிகை | : | 044 - 25226852 |
| தெ.செ.ம.சங்கம் | : | 044 - 42042668 |
| வள்ளல் சபாபதி பள்ளி | : | 044 - 26680482 |
| செங்குந்தமித்திரன் | : | 97911 17261 |

# பாராட்டுகிறோம்



கடலூர் மாவட்டம் புருகீஸ்பேட்டையைச் சேர்ந்த பொது மருத்துவரான **டாக்டர் D. கார்த்திகேயன் செங்குந்தர்** அவர்கள், கடலூர் கூத்தப்பாக்கத்தில் கிளினிக் வைத்து நடத்தி வருவதுடன் கடலூர் கிருஷ்ணா மருத்துவமனையிலும் பணியாற்றி வருகிறார். கொரோனா நோய்க்கு பயமின்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் சேவை செய்து வருகிறார். அவரது சேவை அளப்பரியது. கடலூர் மாவட்டம் மட்டுமல்லாது பிற மாவட்டங்களில் இருந்தும் இவரது வைத்திய தன்மையை அறிந்து நோயாளிகள் நேரில் வந்து பார்த்து சிகிச்சை பெற்று குணமடைந்து இன்முகத்துடன் செல்வதை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. கொரோனா நோய்க்கு சிகிச்சை செய்ய பயப்படும் இந்தக் காலத்தில் நம் குலத் தோன்றல் டாக்டர் D.கார்த்திகேயன் அவர்கள் இப்பணியை மனித நேயத்துடன் மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து வருவது பாராட்டுக்குறியது.



**ஆயுள் உறுப்பினர்**
**கட்டணம்: ரூ. 100**
**செங்குந்த மித்திரன்**
**15 ஆண்டு சந்தா: ரூ. 1000**

**வங்கி விவரம்:**

**South Indian Sengunthar Mahajana Sangam**

| | | |
|---|---|---|
| SB A/c No | : | **020100050304358** |
| Bank | : | **Tamilnadu Mercantile Bank Limited** |
| Branch | : | George Town, Chennai - 600001 |
| IFSC | : | **TMBL0000020** |

**அல்லது**

**South Indian Sengunthar Mahajana Sangam**

| | | |
|---|---|---|
| SB A/c No | : | **527402010002485** |
| Bank | : | **Union Bank of India** |
| Branch | : | Armenian Street Branch, Chennai |
| IFSC | : | **UBIN0552747** |

**அல்லது எந்த வங்கியிலிருந்தும் மேற்கண்ட கணக்கின் பெயருக்கு DD எடுத்தும் அனுப்பலாம்.**

**பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை**
**Pavendar Bharathidasan Arakkattalai**

| | | |
|---|---|---|
| SB A/c No. | : | **420141716** |
| Bank | : | **Indian Bank** |
| Branch | : | MGT Branch, Thambu St, Chennai |
| IFSC | : | **IDIB000M002** |

# செங்குந்தர் மாளிகை

செங்குந்தர் மாளிகை தற்போது சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்குவதற்கு ஏற்ற நிலையில் முழு சுகாதார, குடிநீர் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் உறவினர் பெருமக்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை பயன்படுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொலைபேசி எண்: 044-25226852**

## விடுதி கட்டணம்

| | | |
|---|---|---|
| சிங்கிள் ரூம் | : | ரூ. 250/– |
| டபுள்ஸ் ரூம் | : | ரூ. 500/– |
| டபுள்ஸ் ரூம் ஏ/சி | : | ரூ. 750/– |

மாத வாடகைக்கும் அறைகள் தங்குவதற்கு விடப்படுகின்றன.

| | |
|---|---|
| சிங்கிள் ரூம் (பொது) | ரூ. 6,000/– |
| முன்பணம் | ரூ. 30,000/– |
| சிங்கிள் ரூம் உறுப்பினர் | ரூ. 5,000/– |
| முன்பணம் | ரூ. 25,000/– |
| டபுஸ் ரூம் (பொது) | ரூ. 10,000/– |
| முன்பணம் | ரூ. 50,000/– |
| உறுப்பினர் | ரூ. 9,000/– |
| முன்பணம் | ரூ. 45,000/– |

தற்போது இரவு / பகல் முழு நேரமும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

**- நிர்வாகம்**

# அறிவிப்பு

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்:

செங்குந்த மித்திரன் இதழ் தொடர்பான சந்தேகங்களுக்கும், புகார்களுக்கும் கீழ்க்கண்ட அலைபேசி எண்: **97911 17261**-க்கு தொடர்பு கொள்ளவும். செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் சந்தா எண், முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் அஞ்சலில் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் தெரிவிப்பதோடு, குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் பெயரில், ஆதார் அடையாள அட்டை எண்–ஐ பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

# அறிவிப்பு

திருமண தகவல் மையம் செவ்வாய் கிழமை தவிர அனைத்து நாட்களிலும் செயல்படும்.

ஜாதகப் பதிவுக் கட்டணம் (1 வருடம்) ரூ. 500/–

அலுவலக நேரம்:

**தினசரி காலை 11.00 மணி முதல்**
**இரவு 7.00 மணி வரை**

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்


# செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

- வாரியார் சுவாமிகள்

**மே 2021 மலர்: 21 இதழ்: 5**

**ஆசிரியர்:**

**K.P.K.செல்வராஜ்**

**சந்தா விபரம்**

**தனி இதழ் : ரூ. 15/-**

**15 ஆண்டு சந்தா : ரூ. 1000/-**


**1-12-2020 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்**

**கலர்**

| | | |
|---|---|---|
| நடுப்பக்கம் | : | ரூ. 15,000 |
| முன் உள்அட்டை | : | ரூ. 10,000 |
| பின் அட்டை | : | ரூ. 10,000 |
| பின் உள்அட்டை | : | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | : | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | : | ரூ. 2,500 |
| கண்ணீர் அஞ்சலி (B&W) | | ரூ. 3,500 |


**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**

South Indian Sengunthа Mahajana Sangam

எண்.58, (ப. எண்.89), அரண்மனைக்காரன் தெரு,
சென்னை-600001.

தொலைபேசி : **044 - 25226852**

**நிர்வாக அலுவலகம் (கடிதம் & தொடர்புக்கு)**

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம் (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), எண்.25, ஆரிங்டன் சாலை, சென்னை–600030.

**Phone: 044 - 42042668, 97911 17261**

E-mail: sengunthamithiran@gmail.com
http://www.sengunthamithiran.in

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
# ஆயுள் உறுப்பினர், செங்குந்த மித்திரன் ஆயுள் சந்தா தகவல் படிவம்

ஆயுள் உறுப்பினர் எண் :

செங்குந்த மித்திரன் சந்தா எண் :

புகைப்படம்

1. பெயர்
2. தந்தை / கணவர் பெயர்
3. வயது — பிறந்த தேதி
4. கல்வி — 5. இரத்த வகை
6. தொழில்
7. முகவரி — அஞ்சல் எண்
8. மாவட்டம்/மாநிலம்
10. மொபைல் எண்
11. வாக்காளர் அட்டை எண்
12. ஆதார் எண்
13. மின்னஞ்சல் முகவரி

நமது சங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடப்பேன் எனவும், செங்குந்த சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் எனவும் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்: கையொப்பம்

**அனுப்பவேண்டிய முகவரி:**

**பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,**
**எண்.25, ஆரிங்டன் சாலை, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம்**
**(பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), சென்னை-600030**

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
# அன்பார்ந்த உறவினர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

வணக்கம். செங்குந்தர் மாளிகை சீரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பகல், இரவு எந்நேரமும் (24x7) முழு நேரப் பணியாளரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தொலைபேசி செயல்படுகிறது. அறைகள் தினசரி சுத்தம் செய்யப்படுகின்றன. மின்சாரம், குடிநீர், அனைத்தும் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. குளிர் சாதன வசதியும் தற்போது பழுது நீக்கப்பட்டுள்ளது. அறைகளில் வந்து தங்குவோர் எண்ணிக்கையும் கூடி வருகிறது.

தற்சமயம் படுக்கை விரிப்பான் (Bed Sheets), போர்வை, தலையணைகள் கூடுதலாக தேவைப்படுகின்றன. சுடுதண்ணீர் வசதி செய்ய வேண்டி உள்ளது. லிப்ட் புதியதாக வாங்க வேண்டி உள்ளது. அறைக்கு தங்க வரும் மூத்த குடிமக்கள் (Senior Citizens) மிகவும் சிரமப்படுகிறார்கள். மாளிகையின் முன்புறமும் மற்றும் முகப்பு பகுதியில், டைல்ஸ் பதிக்கப்பட வேண்டும். பெயர்பலகை பல வருடங்களாக தேய்ந்த நிலையில் உள்ளது. வண்ணப்பூச்சும் (Painting) செய்யப்பட வேண்டும். சொத்து வரி மற்றும் மெட்ரோ வாட்டர் பில் சுமார் 2 இலட்சத்துக்கும் கூடுதலாக முன் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ளது. நிர்வாகக்குழு மற்றும் செயற்குழுவில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டிருந்தாலும், இதற்கு குறைந்தது ரூ.10 இலட்சத்துக்கும் கூடுதலாக நிதி வேண்டும் என்ற நிலையில், தற்போதைய நிதி நிலையும், கையிருப்பும் பற்றாக்குறையாக உள்ளது. ஆகவே உறவினர்களும், நிர்வாகிகளும் மனமுவந்து நன்கொடைகள் வழங்கினால் மேற்படி செய்ய வேண்டிய பணிகளை விரைந்து முடித்து, முன்பு போல 'செங்குந்தர் மாளிகை' புதுப்பிக்கப்பட்டு போதிய வருவாயை ஈட்ட முடியும்.

செங்குந்தர் மாளிகை புனரமைப்பு நன்கொடை என்ற பெயரில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெயரில் பணவிடை/ காசோலை மற்றும் இதர வங்கி பரிவர்த்தனைகள் மூலம் தேவைப்படும் நிதியை கணிசமான அளவில் இந்தியன் யூனியன் வங்கி அல்லது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சேமிப்பு கணக்கை பயன்படுத்தி அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**வங்கி விபரம்**

Name : **South Indian Senguntha Mahajana Sanmgam**
Bank : **Union Bank of India** Branch : **Armenian Street**
A/c No : **527402010002485** IFSC : **UBIN0552747**

Name : **South Indian Senguntha Mahajana Sanmgam**
Bank : **Tamilnadu Mercantile Bank Limited** Branch : **George Town**
Ac No : **020100050304358** IFSC : **TMBL0000020**

இப்படிக்கு,

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் மண்டல நிர்வாகிகள்



# சமுதாயப் பணிக்காக ‘பத்மஸ்ரீ’ விருது பெற்ற நம் சமுதாயத்தைச் சேர்ந்த

# டாக்டர் P.K.கோபால்

ஈரோடு நகரத்தில் நமது சமுதாயத்தில் ஏழ்மையான நெசவாளர் குடும்பத்தில் பிறந்து உலகளவில் தொழுநோய் ஒழிப்பிற்கும், தொழுநோயாளிகளின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் குழந்தைகளின் நல்வாழ்விற்கும் 50 ஆண்டுகளுக்கு மேலாக தன்னலமற்ற பொது சேவை ஆற்றிய “பத்ம ஸ்ரீ” டாக்டர், P.K.கோபால் அவர்கள் 1940 ஆகஸ்ட் 19–ந் தேதி திரு. S.P. கருப்பண்ண முதலியார், திருமதி. சுந்தரக்கண்ணு அம்மாவிற்கு மகனாக பிறந்தார். உடன் பிறந்தோர் 4 சகோதரர்கள், 5 சகோதரிகள். பள்ளிக் கல்வியையும் இளங்கலை பட்டப்படிப்பையும் ஈரோட்டில் முடித்து முதுகலை (Social Work) படிப்பினை சென்னை லயோலா கல்லூரியில் பயின்றார். ராஞ்சி பல்கலைக் கழகத்தில் "புனர்வாழ்வு” தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு டாக்டர் பட்டம் (Ph.D) பெற்றார். ஈரோடு தொழில் நகரமாக இருந்த போதும் இதில் நாட்டம் கொள்ளாமல் சமூக சேவையில் ஆர்வம் கொண்டு 1972–ல் கும்பகோணத்தில் இந்தியாவிலேயே முதன்முதலாக ஊனமுற்றோர் மறுவாழ்வு நலத்துறையை தூய இருதய ஆண்டவர் மருத்துவமனையில் தொடங்கி 25 ஆண்டுகள் பணியாற்றினார். இத்தோடு தனது பணி நிறைவு பெறவில்லை என உணர்ந்து ஈரோடு திரும்பினார். தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கென



> உலக நாடுகளின் சபைகளில் தொழுநோயாளிகள் தனித்து விடப்பட்டதைக் கண்டித்து தீர்மானங்கள் பல நிறைவேற்ற பெரிதும் தொண்டாற்றினார். தொழுநோய் இல்லாத உலகத்தை உருவாக்க உழைத்ததோடு தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் புனர்வாழ்வு பெறவும், சமுதாயத்தில் மற்றவர்கள் போல மதிப்பு, மரியாதை பெறவும் அரும்பணியாற்றினர்.



அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டு “IDEA” (Intergration, Dignity of Economic Advancement) என்ற சர்வதேச நிறுவனத்தை தொடங்கி அதனுடைய தலைவர்களில் ஒருவராக 27 ஆண்டுகள் பணியாற்றினர். இதன் கிளைகள் 30 நாடுகளுக்கு மேல் உள்ளது.


இந்நிறுவனத்தின் மூலம் உலகம் முழுவதும் தொழுநோயை ஒழிப்பதோடு, தொழுநோயாளிகளின் வாழ்வில் சமூக முன்னேற்றம், பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்த இந்தியா முழுவதும் மற்றும் சுமார் 36 நாடுகளுக்கு மேலாக பயணம் மேற்கொண்டார்.



Dr.P.K.GOPAL RECEIVED THE NATIONAL AWARD IN 1986 FROM HIS EXCELLENCY Shri.GIANI ZAIL SINGH, PRESIDENT OF INDIA, FOR OUTSTANDING REHABILITATION SERVICE.

இந்தியாவின் நாடாளுமன்ற குழு, ஐக்கிய நாடுகள் சபை, ஜெனிவாவின் உலக மனித உரிமைக் கழகம், உலக சுகாதார நிறுவனம் (WHO) ஐக்கிய நாடுகள் சபை, உலக தொழுநோய் ஒழிப்பு நிறுவனம் (ILEP, TLM, GLRA, ILU) ஆகிய சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து தொழு நோயாளிகளின் சேவைக்காக பணியாற்றி உலக கவனத்தை ஈர்ந்தார். 2005–ல் தேசிய தொழுநோய் மறுவாழ்வு கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று தேசிய அளவில் பல மாநாடுகளை நடத்தினார்.

இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் (Colony) இடங்களை கண்டறிய பாடுபட்டு சுமார் 800 காலனிகளைக் கண்டறிந்தார். உலக நாடுகளின் சபைகளில் தொழுநோயாளிகள் தனித்து விடப்பட்டதைக் கண்டித்து தீர்மானங்கள்



பல நிறைவேற்ற பெரிதும் தொண்டாற்றினார். இதன்மூலம் தொழுநோய் இல்லாத உலகத்தை உருவாக்க உழைத்ததோடு தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் புனர்வாழ்வு பெறவும், சமூதாயத்தில் மற்றவர்கள் போல மதிப்பு, மரியாதை பெறவும் நிதி உதவி வழங்கி சுயதொழில் தொடங்கவும், சொந்தமாக வீடுகட்டிக் கொள்ளவும், இலவச சட்ட ஆலோசனை பெறவும், அவர்களின் குழந்தைகள் நல்ல மேற்கல்வி பயின்று வேலை வாய்ப்பு பெறவும் அரும்பணியாற்றினர். இவரது இத்தகைய முயற்சியினால் இன்று தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் ஆயிரக்கணக்கானோர் மருத்துவர்களாகவும், செவிலியராகவும், ஆசிரியர்களாகவும், பொறியாளர்களாகவும், தகவல் தொழில் நுட்பத்துறை வல்லுனர்களாகவும் உருவாகி சமூகத்தில் அவர்களது பெற்றோரைப் பெருமை அடையச் செய்துள்ளனர்.

இவரது 50 ஆண்டுகால தன்னலமற்ற சமூக சேவையைப் பாராட்டி உலக நாடுகளில் இருந்தும், இந்தியாவிலும் விருதுகள் பல வழங்கி பாராட்டியுள்ளனர். அவற்றில் முக்கியமாக ஜெர்மனியில் 1995–ல் Erwin Stindly Memorial Award, 2000ல் இத்தாலியில் Raoul Follereau Award, 2004–ல் ஜப்பானில் Fesco Award, 2001–ல் லண்டனில் Wallesley Bailey Award வழங்கப்பட்டது.

இந்தியாவில் 1986–ம் ஆண்டு National Award, 2005–ம் ஆண்டு ஜனாதிபதி திரு. R.வெங்கட்ராமன் அவர்களால் ILU Award, 2012–ல் கர்நாடக அரசின் வாழ்நாள் சாதனையாளர் விருது, 2014–ல் காந்தி சேவா சங்கத்தின் சிறந்த சமூக சேவகர் விருது வழங்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக இந்திய அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான "பத்ம ஸ்ரீ" விருதுனை 22–03–2012–ல் அப்போதைய குடியரசுத் தலைவர் மேதகு பிரதீபா பாட்டீல் அவர்களிடம் பெற்றார்.

பணிக்காலத்தில் சந்தித்த முக்கியமானவர்கள் காலஞ்சென்ற அன்னை தெரஸா, குடியரசுத் தலைவர்கள் V.V. கிரி, கியானி ஜெயில்சிங், அப்துல்கலாம், பிரதிபா பாட்டீல், பிரணாப் முகர்ஜி, பிரதம மந்திரிகள் இந்திரா காந்தி, மன்மோகன் சிங், நரேந்திர மோடி, துணை குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடு, முன்னாள் பெட்ரோலிய அமைச்சர் ராம்நாய்க் முக்கியமானவர்கள்.



> இவரது 50 ஆண்டுகால தன்னலமற்ற சமூக சேவையைப் பாராட்டி உலக நாடுகளில் இருந்தும், இந்தியாவிலும் விருதுகள் பல வழங்கி பாராட்டியுள்ளனர். அவற்றில் முக்கியமாக ஜெர்மனியில் 1995–ல் Erwin Stindly Memorial Award, 200ல் இத்தாலியில் Raoul Follereau Award, 2004–ல் ஜப்பானில் Fesco Award, 2001–ல் லண்டனில் Wallesley Bailey Award வழங்கப்பட்டது.



வெளிநாடுகளில் UNO ஐக்கிய நாடுகளின் சபையின் அப்போதைய பொதுச் செயலாளர் கோபி அன்னன், அமெரிக்க அதிபர் ஜார்ஷ்புஷ், பிரிட்டன் இளவரசி டயானா, திபெத்திய தலைவர் தலாய்லாமா போன்றோரை சந்தித்துள்ளார்.

இத்தகைய தன்னலமற்ற, இடைவிடா சேவையில் நிறைவான பணி செய்து கடந்த 1 வருடம் வெளியில் செல்ல முடியாத நிலையிலும் வீட்டிலிருந்தே பணியை தொடர்ந்தார், வயது மூப்பு காரணமாக தனது 81–வது வயதில் 18–03–2021 தேதி தனது சேவையை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்தார். அவருக்கு நமது தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது தன்னலமற்ற சேவையின் மூலம் தொழுநோயாளிகளின் நல்வாழ்வுக்கு இவர் வகுத்த வழியில் தொடர்ந்து உலகம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

## வாரியார் அருளமுதம்

- ★ அனைத்து உயிர்களும் இறைவன் வாழும் கோவில் தான். அதனால் அனைத்து உயிரையும் மதித்து வாழ வேண்டும்..
- ★ உலகில் எல்லாம் தெரிந்தவர்எவருமில்லை. எதுவும் தெரியாதவர் என்றும் எவரும் கிடையாது..
- ★ உன்னை நீ காத்துக்கொள்ள விரும்பினால், எந்த நிலையிலும் கோபம் உன்னை கட்டுப்படுத்த அனுமதிக்காதே.
- ★ பணிவு என்பது மனித வாழ்க் கையின் உயிர்நாடி. அதனால், நம் வாழ்க்கைத்தரம் உயர்நிலையை அடைகிறது.






கடலூர் செங்குந்தர் திருமண மண்டபத்தின் இயக்குனர்கள் திரு P.கோவிந்தசாமி, T.ராஜாமணி, K.ராசு அவர்களின் முயற்சியால் கடந்த 23.05.2021 அன்று கடலூர் நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.500/– மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் 53 பேர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் கடந்த 17.05.2021 முதல் 22.05.2021 வரை திருப்பாதிரிப்புலியூர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 300 பேர்கள் வீதம் கபசுரக் குடிநீர் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பின்பற்றி வழங்கப்பட்டது. இதற்காக திரு. T.ராஜாமணி ரூ. 6500, திரு. K.ராசு ரூ. 13000, திரு.P.கோவிந்தசாமி ரூ. 13000 ஆக மொத்தம் ரூ 32500 வழங்கினார்கள்.





தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

## திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
## திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
## கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
## கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

**இளநிலை (UG)**

| | |
|---|---|
| B.A | - ஆங்கிலம் |
| B.B.A | - வணிக ஆள்முறையியல் |
| B.Com(General) | - வணிகவியல் |
| B.Com(CA) | - கணினி பயன்பாட்டு வணிகவியல் |
| B.C.A | - கணினி பயன்பாட்டியல் |
| B.Sc | - கணினி அறிவியல் |
| B.Sc | - உயிர்வேதியியல் |
| B.Sc | - நுண்ணுயிரியல் |
| B.Sc | - வேதியியல் |
| B.Sc | - கணிதம் |

**முதுநிலை (PG)**

| | |
|---|---|
| M.A | - ஆங்கிலம் |
| M.Com(General) | - வணிகவியல் |
| M.Com(CA) | - கணினி பயன்பாட்டு வணிகவியல் |
| M.Sc | - உயிர்வேதியியல் |
| M.Sc | - தகவல் தொழில்நுட்பவியல் |
| M.Sc | - கணிதம் |
| M.Sc | - வேதியியல் |
| M.Sc | - பயன்பாட்டு நுண்ணுயிரியல் |
| M.B.A | - |

**ஆய்வியல் நிறைஞர் (M.Phil)**

| | |
|---|---|
| M.Phil | - வணிகவியல் |
| M.Phil | - உயிர்வேதியியல் |
| M.Phil | - கணினி அறிவியல் |
| M.Phil | - கணிதம் |
| M.Phil | - வேதியியல் |

**முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)**

| | |
|---|---|
| Ph.D | - வணிகவியல் |
| Ph.D | - உயிர்வேதியியல் |
| Ph.D | - நுண்ணுயிரியல் |
| Ph.D | - வேதியியல் |



## கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு



K.M.G.பாலசுப்பிரமணியன்



K.M.G.சுந்தரவதனம் B.A.,B.G.L.,



K.M.G.இராஜேந்திரன் B.Sc.,M.L.,
வழக்கறிஞர்



K.M.G.முத்துக்குமார் B.Com.,

குன்றனைய புகழ் சுமந்து, சிரகிரிக் குன்றமர்ந்த திருமுருகன் திருவருளால் 1913ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் மு.பழனியப்ப முதலியாருக்கும் – பாப்பாயம்மாளுக்கும் (சடையம்மாள்) திருமகனாய்ப் பிறந்தார் எம்.பி. நாச்சிமுத்து அவர்கள்,

தொடக்க கல்வியினைத் தான் பிறந்த ஊரான சென்னிமலையிலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியினைச் திருப்பூரிலும், பட்டப்படிப்பைத் திருச்சியிலும், சட்டப் படிப்பினை சென்னையிலும் பயின்று ஈரோட்டில் 4 ஆண்டுகள் வக்கீலாகப் பணிபுரிந்தார்.



# கைத்தறிக் காவலர்

# பத்மஸ்ரீ எம்.பி.நாச்சிமுத்து பி.ஏ.,பி.எல்.,

பட்டப்படிப்பு படிக்கின்ற பொழுதே கருணாம்பாள் எனும் மங்கை நல்லாளைக் கரம் பிடித்தார் எம்.பி.என். அவர்களின் பொது வாழ்வினை ஒவ்வொரு அசைவிற்கும் துணை நின்று இன்னல்கள் உற்றவர் இவரது துணைவியார்,

சட்டம் படித்து வக்கீலாக வாழ்க்கையைத் தொடங்கினாலும், வறுமைக் கோட்டுக்கும் கீழே வாழ்வில் அல்லலுற்று, தனியார் இடத்தே தறித்தொழிலில் சிக்கிக் கிடந்த நெசவாளர்களை ஒரு கூட்டுறவு அமைப்பின் கீழே கொண்டு வருவதிலேயே அவருக்கு நாட்டம் மிகுந்திருந்தது.

கிராமியப் பொருளாதார நிர்மானத் திட்டங்களுக்கு வலுவூட்ட அண்ணல் காந்தியடிகளால் விடுக்கப்பட்ட அழைப்பில் ஈர்க்கப்பட்ட எம்.பி.என். நெசவாளர் வாழ்வில் அக்கறை கொண்டு அதற்காக அரும்பாடுபட்டார். அந்த சிந்தனையின் விடிவெள்ளியாக 1941ம் ஆண்டு உருவானதுதான் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகும். 45 ஆண்டுகள் சென்டெக்ஸின் தலைவராக இருந்து நெசவாளருக்கும், கூட்டுறவுத் துறைக்கும் அவர் ஆற்றிய பணிகள் அளவில் அடங்கா!

நாடா ஓலைகளோ நமச்சிவாய மந்திரங்களாகவும், நெசவாளர் குடியிருப்புகளே அவர் தரிசிக்கும் புண்ணிய சேத்திரங்களாகவும் ஆயின தறிக் குழிக்குள் வீழ்ந்த தறியாளர் வாழ்வை நெறிப்படுத்த அவர் அல்லும், பகலும் ஆற்றிய பணிகளுக்கு மத்திய அரசு

1983ம் ஆண்டு 'பத்மஸ்ரீ' விருது வழங்கி நெசவாளாகளைக் கௌரவப்படுத்தியது

1982ம் ஆண்டு தமிழக அரசு தமிழகத்தின் தலைசிறந்த கூட்டுறவு தலைவர் என இவருக்கு விருது வழங்கியது. 1981ம் ஆண்டு தங்கப் பதக்கமும், 1982ம் ஆண்டு வைரப் பதக்கமும், தறித் தொழிலுக்காக இவர் ஆற்றிய பணிகளுக்கு இவரைத் தேடி வந்த விருதுகள்.

1952ம் ஆண்டு முதல் 1968 வரை இடைப்பட்ட 17 ஆண்டுகள் கோ ஆப்டெக்ஸின் பொற்காலமாகும். இந்த 17 ஆண்டுகளில் பத்மஸ்ரீ எம். பி.என் அவர்கள் கோ–ஆப் டெக்ஸின் தலைவராக இருந்து எண்ணரிய பணிகளாற்றி, நெசவாளர்களுக்கு நிழல் தரும் ஆலமரமாய் அதனை மாற்றி அமைத்தார். இன்று விண்ணுயர வளர்ந்து நெசவாளக்கே உரிமையாய் விளங்கும் பல கோடி மதிப்புள்ள சென்னை பாந்தியன் சாலைக் கட்டிடம் எம்.பி.என். அவர்களின் உழைப்பின் சின்னமாகும்.

மேதகு பாரதக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களால்





"கல்விப்பணியிலும், ஆன்மீகப் பணியிலும் அளவிலா நாட்டம் கொண்டு இவர் செய்த செயல்கள் ஏராளம்."

"நெசவாளர் தந்தை" என்று அன்புடன் அழைக்கப்பட்ட எம்.பி.என். அவர்கள் தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை திருநெல்வேலியில் தோன்றுவதற்குத் துணையாய் இருந்து, அதன் தலைவராய் 1953 முதல் 1969 வரை பணியாற்றி அதன் வளர்ச்சிக்கு வித்திட்டார்.

1953 முதல் 1985 வரை 32 ஆண்டுகள் தொடர்ந்து அகில இந்திய கைத்தறி வாரியத்தில் உறுப்பினராய் இருந்த ஒரே நெசவாளர் தலைவர் இவர்தான். கூட்டுறவு துறையின் கீழுள்ள நெசவாளர்களுக்கு இன்று நடைமுறையிலுள்ள பல திட்டங்களுக்கு வித்திட்டவர் என்.பி.என். 1969 தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சென்ற கைத்தறித் தூதுக் குழுவின் தலைவராய் விளங்கினார். ரிசர்வ் வங்கியின் ஆலோசனைக் குழு உறுப்பினராய் 2 ஆண்டுகள் இருந்ததும், 1977 முதல் 1982 வன இந்தியன் வங்கியின் இயக்குநராய் 5 ஆண்டுகள் இருந்ததும், கோவை மத்திய கூட்டுறவு வங்கியில்

இயக்குநராய் 2 ஆண்டுகள் இருந்ததும் இவரது பல்துறை ஆற்றலுக்கு சான்று பகர்ந்து நெசவாளர்களுக்கும், இயக்கத்தின் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்தது.

சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியில் தாளாளராய் 17 ஆண்டுகளும் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியின் உதவித் தலைவராகவும், ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தின் பொருளாளராகவும், ஈரோடு கலைக்கல்லூரியின் உறுப்பினராகவும் இருந்த எம்.பி.என் சென்னிமலையில் மு.ப. நாச்சிமுத்து மொ. ஜெகநாதன் பல்தொழில் பயிலகம் உருவாவதற்கு உறுதுணையாய் இருந்த நிறுவனர்களில் ஒருவராவார். கல்விப்பணியிலும், ஆன்மீகப் பணியிலும் அளவிலா நாட்டம் கொண்டு இவர் செய்த செயல்கள் ஏராளம்.

மத்திய, மாநில அரசுகளால் கைத்தறிக்கும், கூட்டுறவுக்கும் அமைக்கப்பட்ட திட்டக்குழுக்களில் அங்கம் வகித்து நெசவாளர் நலனுக்காகப் பல திட்டங்கள் உருவாகக் காரணமாயிருந்தார்.





1972ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற ஜவுளித்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பங்கு கொண்டபோது விசைத்தறி தொடர்பாக உணர்ச்சிவசப்பட்டுப் பேசி – தன்னிலை இழந்து – உணர்வற்று மயங்கி வீழ்ந்தார். இதன் விளைவாக இரண்டு மாதங்கள் படுத்த படுக்கையானார். எம்.பி.என். அவர்களில் பொது வாழ்வு அஸ்தமித்ததென நினைத்தோர் பிரமிக்கும் வண்ணம் நெசவாளர் செய்த தவப்பயனாக மீண்டும் உத்வேகத்துடன் தன் போராட்ட வாழ்வைத் தொடர்ந்தார்.

1976ஆம் ஆண்டு தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் தனிப் பெருந்தலைவரானார் நெசவாளர்களுக்காக உழைத்த உத்தமர்.

வாழ்விழந்த நெசவாளர்க்கு வாழ்வு கொடுத்த எம்.பி.என். வாயிருந்தும் ஊமையராய் இருந்த நெசவாளர்களுக்கு குரல் கொடுத்த எம்.பி.என். கண்ணிருந்தும் குருடராய் இருந்த நெசவாளர்க்கு ஒளி விளக்காய்த் திகழ்ந்த எம்.பி.என். 46 ஆண்டுகள் ஓடி, ஓடி உழைத்து 1987ம் ஆண்டு ஜூன் 27ம் நாள் தன் இறுதி மூச்சடக்கி மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.



## M.P.N. அவர்கள் வகித்த பதவிகள்

### 1. தலைவர்

சென்டெக்ஸ் (கே.885 சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்...) 1941 10 1987.

கோ–ஆப்டெக்ஸ் (தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்) 1952 to 1969

தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, திருநெல்வேலி – 1953 to 1969

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கைத்தறி தூதுக்குழு – 1969

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

ஈரோடு மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் சென்னிமலை நகர கூட்டுறவு வங்கி (1982 to 1987)

எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் கல்வி அறக்கட்டளை

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் திருப்பணிக்குழு, சென்னிமலை

### 2. உப தலைவர்

ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி கோ–ஆப்டெக்ஸ் (தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்) 1950–1952

### 3 இயக்குநர்

இந்தியன் வங்கி – 1977 to 1982

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு

### 4 தாளாளர்

சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி

### 5. பொருளாளர்

ஈரோடு கலைமகள் கல்வி நிலையம்

### 6. செயலாளர்

எம்.பி.என்.நகர் தொடக்கப்பள்ளி

### 7. உறுப்பினர்

அகில இந்திய கைத்தறி வாரியம் 1953 – 1985

ஈரோடு கலைக் கல்லூரி

அகில இந்திய கைத்தறி துணி விற்பனை சங்கம்,

பம்பாய் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கைத்தறி, ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம்

தென்னிந்திய கைத்தறி ஆராய்ச்சி நிறுவனம் (SITRA)

# J.S. நினைவுகள்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னோடி தலைவர் திரு. J.சுத்தானந்தன் செங்குந்தர் அவர்களின் 11வது நினைவு நாளையொட்டி அவர்தம் நினைவுகளை செங்குந்தர் சொந்தங்கள் மனதில் ஏற்றி அஞ்சலி செலுத்தும் விதமாக சில வார்த்தைகள்..

செங்குந்தர் சமுதாய மேம்பாட்டையும் நெசவாளர்கள் நலனையும் இரு கண்களாக பாவித்து அல்லும் பகலும் திரு.J.S. அவர்கள் உழைத்திட்டார். மாணவர்களின் கல்வி நலனில் தனி அக்கறை கொண்டார். ஐ.ஐ.டி. பாலிடெக்னிக் போன்ற தொழிற்கல்வி படிப்புகளைப் படித்து வேலைவாய்ப்பை பெற்றிட அதிகம் ஊக்கப்படுத்தினார்.

இளைஞர்களை உற்சாகப்படுத்தி மாவட்டம் தோறும் தொழில் முனைவோர் கருத்தரங்குக் கூட்டங்களை ஏற்பாடு செய்து சுயதொழில் தொடங்கும்படி அறிவுறுத்தினார்.

கல்விச் சேவையில் தாமே முன்மாதிரியாக கிட்டத்தட்ட 8 பள்ளிகளின் தாளாளராக, ஆலோசகராக இருந்து பள்ளி மாணவர்களுக்கு தரமான கல்வியை கற்பிக்க உதவினார்.

பின்னாளில் இரண்டு பொறியியல் கல்லூரிகளை ஒன்று பெருந்துறையிலும், மற்றொன்றை சென்னிமலையிலும் உருவாக்கி பல நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்த பொறியியல் பட்டப்படிப்பை குறைந்த கட்டணத்தில் நன்கொடை பெறாமல் குறிப்பிட்ட மாணவர்களுக்கு தங்கும் இடவசதிகூட செய்து கொடுத்து படிப்பதற்கு உதவினார்.

இன்று அவர் நடத்திய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயின்ற மாணவர்கள் நல்ல வேலை வாய்ப்பை பெற்று, பல்வேறு உயர்ந்த பதவிகளில் பணியாற்றியும், ஓய்வு பெற்றும் இருப்பதைப் பல இடங்களில் காணமுடியும்.

நெசவாளர்கள் பிரச்சினைகளை தீர்த்து அவர்களை துன்பத்தில் இருந்து விடுவிக்கும் சமூகப் பாதுகாப்பாளராக இருந்து நெசவாளர் முன்னேற்றத்துக்கான பணிகளிலேயே தமது வாழ்நாளின் பெரும்பகுதியை செலவிட்டார். இதனாலேயே முன்னாள் ஜனாதிபதி திரு. கியானி ஜெயில்சிங் அவர்களால் உத்யோக ரத்னா விருது திரு. J.சுத்தானந்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அன்று முதல் தன் வாழ்நாளின் இறுதி வரை நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்த அனைவரின் உள்ளங்களிலும் ‘நெசவாளர் நேசன்’, ‘கைத்தறிக் காவலர்’ என்றெல்லாம் போற்றப்பட்டார்.

1927ஆம் ஆண்டு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தோற்றுவிக்கப்பட்டாலும், பத்மஸ்ரீ M.P.நாச்சிமுத்து அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அவர் மறைந்த 1987ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 23 ஆண்டுகள் தென்னந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தொடர் தலைவராக செயல்பட்டு, பட்டிதொட்டிகளில் எல்லாம் செங்குந்தர் கிளைச் சங்கங்கள்

நூற்றுக்கணக்கில் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான செங்குந்தர்கள் உறுப்பினராக சேர ஆரம்பித்தனர். சங்கம் மிகப் பெரிய அளவில் எழுச்சி பெற்றது. இதன் விளைவாக சென்னை, குடியாத்தம், கும்பகோணம், மதுரை இப்படி பல இடங்களில் மாநாடுகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு சமுதாயத்தின் வலிமையையும், ஒற்றுமையையும் தென்னிந்தியாவுக்கு வெளிக்காட்டினார்.

இதன் பயனாக, தமிழ்நாடு மட்டுமின்றி,



ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஸ்ரீ லங்கா, போன்ற மாநிலங்களிலும், ஒன்றிய பிரதேசங்களிலும், அந்தமான் நாடுகளிலும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் செயல்பாட்டை விரிவுபடுத்தினார்.

நூற்றாண்டைக் காணப்போகும் நம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் பழமையான வரலாற்றையும், கலாசார பண்பாட்டையும் கொண்டது. இதன் மாண்பினை இறுதிவரை காத்திடும் வகையில் அவர் நடந்துசென்ற பாதையில் சங்கத்தின் செயல்திட்டங்களை மேம்படுத்தி, கல்வி, சமுதாய, பொருளாதார, தொழில் மற்றும் மகளிர் முன்னேற்றங்களில் உயர்ந்து நிற்பதற்கு நாம் செய்யும் நடவடிக்கையே, அந்த மாபெறும் தலைவருக்கு செலுத்தும் இதயப்பூர்வமான அஞ்சலியாகும்.

நீண்ட நெடிது உயர்ந்த, பக்தி ததும்பும் அவர்தம் திருமுகத்தை நினைவில் கொண்டு அவர் மறைந்த ஜூன் 25ஆம் தேதி நினைவு நாளை இந்தியா மட்டுமல்லாமல், உலகமெங்கும் வாழ்ந்திடும் செங்குந்த தமிழர்கள் அஞ்சலி செலுத்திடக் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்க J.S. புகழ்!

வளர்க செங்குந்தர் சமுதாயம்!!

*தகவல் தொகுப்பு:*

**R.P.குமரகுருபரன், பொதுச்செயலாளர்,**

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.**

# உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும்,
வீரமும், விவேகமும் நிறைந்த
செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

*வீடுவரை உறவுமில்லை!*
*வீதிவரை யாருமில்லை!*
*ஆஸ்பத்திரியில் இடமில்லை!*
*காடு செல்ல ஆம்புலன்ஸ் இல்லை!*

கொரோனா காட்டும் வழிதான் இது. இந்த வலியை பொறுத்துக் கொள்ள நாம் மாமனிதர்கள் இல்லை. சாதாரண மனிதர்கள். பொறுத்தது போதும் பொங்கியெழுவதற்கு நாம் ஒன்றும் திரைப்பட கதாபாத்திரங்களுமல்ல...

சுயக்கட்டுப்பாடு ஒன்றே நாம் கொரோனாவை விரட்டியடிப்பதற்கான வழிமுறையாகும். இதை ஒழுங்காக நம் வீட்டில் கடைப்பிடித்தாலே சிறப்பான ஒன்றாகும்.

பணம் பத்தும் செய்யும் என்று சொல்வார்கள் அதைப் பொய்யாக்கியது இந்தக் கொரோனா காலம்.

மாசடைந்த காற்றை முகக் கவசம் இல்லாமல் நுகர்ந்து வாழ்ந்தோம், ஆனால் இன்று சுத்தமான காற்று வீசும்போது அதை சுதந்திரமாக நுகர முடியாமல் முகக்கவசத்தோடு வாழ்கிறோம். வாழ்க்கை என்பது இதுதானோ!



கொரோனா முதல் அலையைப் பார்த்துக் கூட நாம் பக்குவப்படவில்லை, அனுபவப்படவில்லை, போகட்டும் இரண்டாவது அலையில் நம்மை இன்னமும் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் 'கொரோனா' என்னும் பாம்பை நாம் இந்த முறை அடித்து விரட்டவேண்டும். ஏனென்றால் காலைச் சுற்றிய பாம்பாக அது மாறிய பின்பு, அது நம்மைக் கடிக்காமல் விடாது. ஆம், இது தொடர்ச்சியாகக் கூடாது. உடனடியாக தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

நம்முடன் இருந்த உறவுகள், நண்பர்கள் என பலரை நாம் எதிர்பாராமல் இழந்து நிற்கின்றோம். அதேபோல் பலர் தங்களின் வாழ்வாதாரத்தைத் தொலைத்துவிட்டுத் தவிக்கின்றனர்.

அத்தகைய உறவுகளுக்கு நம்மால் இயன்றவரை உதவிகள் செய்வோம். ஆதரவற்றோருக்கு கை கொடுப்போம், அவர்களின் துயர் துடைப்போம்.

*நமக்கு நாமே ஆறுதல் கூறும் மனதிடம்*
*நம்மிடம் இருந்தால் அனைத்தையும்*
*கடந்து போகலாம். - இந்தக் கொரோனா*
*காலத்தையும் வென்று காட்டலாம்!*

மீண்டும் சந்திப்போம்

KPK செல்வராஜ்

பிரியமுடன்...



# மதுரை திருமுருக ஐயப்ப சேவா சங்கத்தின் புத்தாண்டு தின அன்னதானம் - திருவிளக்கு பூஜை

மதுரை செல்லூர் திருவாப்புடையார் கோவில் செங்குந்தர் உறவின் முறை வீர விஜய விநாயகர் ஆலயத்தில் 1982ம் ஆண்டு முதல் வருடத் தோறும் 64ம் நாயன்மார், நம் குலகுரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பெயரால் இயங்கி வரும் திருமுருக ஐயப்ப சேவாசங்கத்தினரால் விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகளும், அன்னதானங்களும், விளக்கு பூஜை ஒவ்வொரு ஆண்டின் துவக்க நாளான ஜனவரி 1ஆம் தேதி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சபரிமலை, பழனிமலை யாத்திரைக்கு விரதம் மேற்கொள்ளும் இச்சங்கத்தினர் யாத்திரை செல்லும் முன் விநாயகருக்கு அபிஷேக வழிபாடுகள் நடந்துகின்றனர். அன்று மதியம் சர்க்கரை, பொங்கல் புளியோதரை, கூட்டு காய்கறி ஏற்பாடு செய்து வாகனங்களில் எடுத்துச் சென்று சுந்தர் ராஜன்பட்டி இந்திய பார்வையற்றோர் சங்கம், மதுரை சேவாஸ்ரமம் பெண்கள் தொண்டு நிறுவனம், அரவிந்த் முதியோர் இல்லம், இன்ப இல்லம் (பசுமலை) அன்னை விடுதி (பெருங்குடி) ஆகிய இடங்களுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு பரிமாறி அன்னதானம் செய்து புத்தாண்டை தர்மத்தின் மூலம் துவக்குகின்றனர்.

அன்று மாலை அப்பகுதி மக்கள் அனைவரும் கலந்து ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக அமைய வேண்டும் வாழ்க்கையில்



எல்லோரும் நலமும் வளமும் பெற வேண்டும் உலகம் நலம் பெற வேண்டும் என்று வேண்டி விநாயகர் ஆலயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களின் திருவிளக்கு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. திருவிளக்குப் பூஜை கண்கொள்ளா காட்சிக்கு மெருகூட்டும் விதமாக அந்நிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்தித்தரும் ஸ்ரீலலிதை பஜன மண்டலிக் குழுவினரையும் அதன் தலைவி திருமதி. அன்னக்கொடி காந்தி அவர்களின் நாமாவளிகளும் புத்தாண்டின் மற்றும் ஒரு முத்தாய்பாய் அமைந்து அருளை அள்ளி வழங்குகிறது.

இந்த இறையருள் சேவைக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த திருமுருக ஐயப்ப சேவா சங்கத்தினரும் மற்றும் நல்ல உள்ளங்கள் கொண்ட ஆன்மீக அன்பர்களின் ஒத்துழைப்புடன் இனிதாக நடைபெற்று வருகின்றது. இத்தருனத்தில் அவர்களது வாழ்வும் வளம் பெற வேண்டுகின்றோம்.

திருமுருக ஐயப்ப சேவா சங்கத்தின் நிறுவனத் தலைவரும், மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கச் செயலாளருமான B.ரவீந்திரன் யாத்திரைகளுக்கு குருநாதராக உள்ளார். 1982ஆம் ஆண்டு முதல் சபரிமலை யாத்திரைக்கு சென்று வந்துகொண்டிருக்கிறார். பழனிமலை யாத்திரைக்கு 19 ஆண்டுகளாக சென்று வந்துள்ளார். சுமார் உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர். ஜனவரி 1ஆம் தேதி எந்தக் கிழமையாக இருந்தாலும் அந்நாளை இதுபோல் இறையருள் சேவை செய்து எல்லோரையும் இன்புற்று இருக்கச் செய்து இச்சங்க உறுப்பினர்கள் தம் குடும்பத்தினருடன் பங்கு கொண்டு மகிழ்ந்து வருகின்றனர்.


# செங்குந்த மித்திரனில் விளம்பரம் செய்யுங்கள்!

உங்கள் இல்லத் திருமண விழா, காதணி விழா, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் விழா போன்ற சுபநிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் விளம்பரமாக வெளியிடலாம்.

| | | |
|---|---|---|
| அரைப்பக்கம் (கலர்) (140mm X 100mm) | – | ரூ. 2,500 |
| முழுப்பக்கம் (கலர்) (140mm X 200mm) | – | ரூ. 5,000 |
| கண்ணீர் அஞ்சலி முழுப்பக்கம் (B&W) | – | ரூ. 3,500 |



மேலும் விபரங்களுக்கு தலைமைச் சங்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.


**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட கிளைச் சங்கங்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.**
**தனி நபர்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரத்திற்கு அனுமதி இல்லை.**


பொன்விழா காணும் பாரம்பரியம்
SINCE 1961
50
NATIONAL
SINCE 1961
NATIONAL
COTTON DHOTIES AND SHIRTINGS
MADE WITH 100% SUPER FINE COTTON
NATIONAL KHADI STORES
2/646 A & 2/646 B, VENUS GARDEN,
MANGALAM MAIN ROAD,
ANDIPALAYAM (PO)
TIRUPUR - 641 687
PHONE:0421 2262180, 2262380
FAX:2262124
EMAIL:khadiking@airtelmail.in

# ஜூனில் மறைந்த சுகந்த மலர்கள்!





செங்குந்தர் குலம்காக்க செந்தில் வேலன்
சீர்கொண்டு வந்திடுவான் சிவனின் மைந்தன்,
செங்குந்தர் நலம்காக்க செனித்த வர்கள்
செகமீன்ற தலைவர்கள் சிறப்பு பெற்ற
செங்குந்தர் வழித்தோன்றல் சுகந்தம் வீசும்
செந்தூர மலர்களான சொந்தம் கண்டோம்,
செங்குந்தர் வளம்பெறவே சேவை செய்த
செம்மல்கள் நாச்சிமுத்து சுத்தா னந்தன்,

பொய்யறியா மனத்திற்குப் புதுமை சேர்க்க
பத்மஸ்ரீநல் விருதுவந்து பக்கம் நிற்க,
கைத்தறியின் காவலனாய்க் காத்து வந்தார்
கருணைகொள் தலைவரான நாச்சி முத்து,
மெய்யறிந்த சான்றோனாய் மேகம் போல
மெலிந்தநம்மின் சொந்தமெலாம் மேன்மை கொள்ள
தொய்வின்றி உழைத்திட்ட தூய வீரர்
தொடர்பயணம் நிறைந்ததுவோ இந்த மாதம்!

தசையுருக தறிநெய்யும் குந்தர் ஓங்க
தனிக்கவனம் கொண்டவரோ தன்னை ஈந்து,
வசவாளர் வருந்திநிற்க வையம் போற்ற
வளம்சேர்க்க புகழ்பூக்க வறுமை நீங்க,
நெசவாளர் நேசனான சுத்தா னந்தன்
நேர்மையின் இருப்பிடம்தான் மிகையோ இல்லை,
திசையெட்டும் நடைபயின்று தொண்டும் ஆற்றி
திருஜெஎஸ் மறைந்ததுவும் இந்த மாதம்!

**கவிஞர். அ.முத்துசாமி, தாரமங்கலம்.**



# அன்புள்ள உறவுகளுக்கு வணக்கம்!

உலகளவில் இந்தியாவை பெரிதும் ஆட்டிப் படைத்து வரும் கொரோனா பெருந்தொற்று, தமிழகத்திலும் முதல் நிலைப் பெற்று, நம் சமுதாய மக்கள் அடர்த்தியாக வசித்து வருகின்ற மேற்கு மண்டலத்திலும், இன்னும் பல பிற மாவட்டங்களிலும் தீவிரமடைந்து உயிர்பலி கொண்டு பல சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த வேளையில் நமது சமுதாய உறவுகள் தொழில், வேலை வாய்ப்புகளை இழந்து இல்லங்களிலேயே முடங்கிக் கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு ஆறுதல் வார்த்தை சொல்வதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை.

கொரோனா முதல் அலையின் தாக்கம் குறைந்து, மக்கள் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டும் எழுந்து வந்த நிலையில் கொரோனா இரண்டாம் அலை அதிக பாதிப்புகளையும் உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தி வருவது கவலை தரத்தக்கதாக உள்ளது.

இந்த முறை நகரங்களைப் போலவே கிராமங்களிலும் நோய்த் தொற்று அதிகரித்து காணப்படுகிறது.



நமது மாநில, மாவட்ட, கிளைச் சங்க நிர்வாகிகள் தாங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, மைய, மாநில அரசுகள் அறிவுறுத்தும் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை தவறாமல் பின்பற்ற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

சமூக இடைவெளியை கடைப்பிடித்தும், முகக் கவசம் அணிந்தும், நோய் எதிர்ப்புத் திறனை அதிகப்படுத்தும் காய்கறி, பழ வகைகளை போதிய அளவில் உணவுடன் சேர்த்துக் கொண்டும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறோம்.

தடுப்பூசி போட்டுக் கொள்வதில் தயக்கம் காட்ட வேண்டாம். இன்றைய கால சூழ்நிலையில் நம் உயிரை பாதுகாத்துக்கொள்ள இது ஒன்றுதான் வழியாக இருக்கிறது.

அனைத்து அலுவலகங்களைப் போலவே, செங்குந்த மித்திரன் அலுவலகமும் முழுமையாக இயங்க முடியவில்லை. நடப்பு மே திங்கள் இதழ் மின் இதழாக (E–Magazine) ஆக வெளியிடப்படுகிறது.

திருமண விளம்பரங்களும், இதர விளம்பரங்களும் தங்கள் வேண்டுகோள்படி புத்தகமாக வெளிவரும் போது பிரசுரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமணம் மற்றும் வர்த்தக விளம்பரங்களை வழக்கம்போல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாக முகவரிக்கு வங்கி பணப்பரிவர்த்தனை விபரங்களுடன் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

பன்னிரெண்டாம் வகுப்பு (+2) மாணவர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்குவதை +2 பொதுத் தேர்வுக்கு பின்னரும், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வை, கொரோனா நோய் குறைந்து, ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னரும் நடத்தப்படும் என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்நாள் சாதனையாளர்களை பாராட்டும் தகுதி வாய்ந்த சான்றோர்கள் தங்கள் இசைவினை (விருப்பத்தை) கடிதம் (அ) 9791117261 என்ற அலுவலக அலைபேசிக்கு தகவல் கொடுக்கலாம்.

முன்பே வேண்டுகோள் விடுத்தபடி, விருது வழங்கப் பிரியப்படும் ஆர்வலர்கள் மற்றும் வள்ளல்கள் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கலாம். செங்குந்தர் மாளிகை புனரமைப்புக்கும், பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக்கும் நிதி உதவி கோரி உள்ளதை மீண்டும் நினைவில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முன் ஆண்டுக்கும் நடப்பு 2021–22 ஆம் ஆண்டுக்கும் மாவட்ட சங்கங்களின் ஒருங்கிணைப்பு (Affilation Fees) சந்தாவை செலுத்த வேண்டுகின்றோம்.

செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியை மேம்படுத்த மாவட்ட நிர்வாகிகளையும், ஆர்வலர்களையும் வேண்டுகிறோம்.

இது போன்ற சூழ்நிலையில் தொடர்பு கொள்ளவும், செய்தி பரிமாறிக்கொள்ளவும் உறுப்பினர்கள் தங்கள் மின்அஞ்சல் முகவரியை, வாட்ஸ்அப் எண்ணுடன் அலுவலகத்திற்கு தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

எதிர்வரும் ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட இருக்கிறது. நமது குலத்தில் தோன்றிய தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் தாம் நிறுவிய மனவளக்கலை மன்றம் மூலம் யோகா பயிற்சியை மக்களிடையே பரப்பி சென்றுள்ளார்கள்.

இன்றைய கொரோனா காலத்தில் மூச்சுப் பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் மிக இன்றியமையாதது என்பதால் நமது செங்குந்த சங்க நிர்வாகிகள் செங்குந்தர் சங்க கிளைச் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு ‘யோகா’ வகுப்புகளை நடத்தி உறுப்பினர்களுக்கு நன்மை உண்டாகக் கூடிய வகையில் செயல்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கொரோனாவை நிச்சயம் செல்வோம்!

புதுவாழ்வு மீண்டும் பெறுவோம்!

நம்பிக்கை மற்றும் வாழ்த்துக்களுடன்

**R.P.குமரகுருபரன்,**
**பொதுச்செயலாளர்,**
**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.**

# வாளுக்கும் வேலுக்கும் வேலையில்லை

## செங்குந்தர் இன முழக்கப் பாடல்

("ஒரு தாய் மக்கள் நாம் என்போம்" - இசைப் பாடல் மெட்டு)

*செங்குந்தர் குலம்நம் பேரினமாம்*
*சங்கத் தமிழ்கூறும் ஓரினமாம்*
*வங்கக்கடல் அலை ஓரத்திலே*
*சிங்கத் தமிழராய் வாழ்பவராம்*

*வாழ்வோம்! வாழ்வோம்!*
*உயர்வோம்! உயர்வோம்!* (செங்குந்தர்)

*உயிர்மெய் எழுத்தாய் இணைந்திடுவோம்*
*உயிரையும் இனத்திற்குத் தந்திடுவோம்*
*வயிற்றையும் வாயையும் கட்டியுமே*
*பயிர்போல் விளைந்து உதவிடுவோம்...* (செங்குந்தர்)

*போற்றுதல் தூற்றுதல் நமக்குண்டாம்*
*தேற்றுதல் நமக்கு நாமேதான்*
*கூற்றுவன் வந்தே எதிர்த்தாலும்*
*மாற்றம் இலாத நம் தலைவர்!* (செங்குந்தர்)

*நாளும் நம் ஆளும் துணையிருந்தால்*
*வாளுக்கும் வேலுக்கும் வேலையில்லை!*
*காலம் ஒருநாள் கைகொடுக்கும்*
*தமிழ் மாநிலக் கட்சி பேரெடுக்கும்..* (செங்குந்தர்)

*தூற்றுதலுக் கஞ்சா தூயவராம்*
*மாற்றம் விழையும் நேயவராம்*
*சீற்றம் சிந்தையில் கொண்டாலும்*
*மாற்றம் இலாத நம் தலைவர்* (செங்குந்தர்)

**ஆசிரியர் E. லோகநாதன்,**
**மாநில செயற்குழு உறுப்பினர், காங்கேயநல்லூர்.**

# SENGUNTHAR ENGINEERING COLLEGE

Estd. 2001

(AUTONOMOUS)

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956

TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.

ISO 9001 REGISTERED

**B.E.**
CIVIL | CSE*
ECE* | EEE*
MECH*

*Permanently Affiliated

**MBA**

**Ph.D**
CSE | ECE

**TNEA 2617**

**M.E.**
Structural Engg.
CSE |
VLSI DESIGN

# SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

**B.E.**
MEDICAL ELECTRONICS ENGG.*

*Permanently Affiliated

ROBOTICS & AUTOMATION

**B.Tech.**
INFORMATION TECHNOLOGY

**TNEA 2629**

**M.E.**
COMM & NETWORKING
MEDICAL ELECTRONICS

# SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY
Estd. 2017

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)



**D.PHARM.** | **B.PHARM.**
Lateral Entry



For Admission Contact

**Phone : 04288 - 254716, 255716, 253716, 255727**
**Cell : 93674 74849, 93600 53352**

Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in





# செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

**(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)**

**(செங்குந்தர் திருமண தகவல் மையம்)**

**குறிஞ்சி குகன் நிலையம்**

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

**www.cheyyarkurinjikuganmatrimony.com**

**E-mail : senguntharsmanamaalai@gmail.com**

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

**சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!**

**CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB), Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891 NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.**

**வரன் பார்க்க வாங்க:**

**பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை**

**விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.**



# அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

அன்னக்கொடி காந்தி
மதுரை.

## பாடல் - 16

*கிளியே, கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்தொளிரும்*
*ஒளியே, ஒளிரும் ஒளிக்கிடமே, எண்ணில், ஒன்றுமில்லா*
*வெளியே, வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே,*
*அளியேன், அளிவளவிற்[கு] அளவானது அதிசயமே.*

கிளியைப் போன்ற அழகிய ரூபமுள்ள அபிராமியே, உன் அடியார்களாகிய நெருக்கமான அன்பர்கள் நெஞ்சத்தில் நிலையாக நின்று பிரகாசிக்கும் ஜோதி ஸ்வரூபமானவளே, சூரிய, சந்திர, அக்னி என்ற மூன்று சுடருக்கும் மூலமானவளே, ஒன்றுமே இல்லாத சுத்த சூன்யமான வெற்றிடமானவளே (ஆகாயத்திற்கும் அப்பாற்ப்பட்டவெளி) ஆகாயம் முதலாக ஐம்பெரும் பூதங்களாக பரந்து விரிந்தவளே, அனைத்திற்கும் அன்னையானவளே, இத்தகைய பேரொளியானது அறிவற்ற அடியேனது சிற்றறிவிற்கும் புரியுமாறு எளியேனது சிந்தையிலும் நிறைந்திருப்பது அதிசயம் அல்லவா?

**பலன்: நல்ல கண் பார்வை, கண் ஒளி கூர்மையாகும்.**

கிளைஞர் : அம்பாளுக்கு நெருக்கமான அடியவர்
கிளர்ந்து : மென்மேலும்
எண்ணில் : ஆராய்ந்தால்
அளியேன் : அடியேன்
அதிசயம் : வியப்பு

## பாடல்-17

*அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்*
*துதிசய, ஆனன, சுந்தரவல்லி, துணை இரதி*
*பதி, சயமானது அபசயமாக, முன் பார்த்தவர்தம்*
*மதிசயமாக அன்றோ, வாம பாகத்தை வவ்வியதே.*

எங்கும் எதிலும் காண முடியாத வியக்கத் தக்க வண்ணம் பேரழகு உருவம் கொண்ட என்றும் புதுமையான அபிராமியே, அனைத்து தாமரை மலர்களும் போற்ற வணங்குகின்ற வெற்றி தரும் முகம் உடையவளே, பேரழகான பூங்கொடி போன்ற மென்மையானவளே, இரதி தேசியின் துணைவனான மன்மதன் மற்ற இடங்களில் எல்லாம் பெற்ற வெற்றிகள், தோல்வியாக மாறும்படி அவனைத் தன் நெற்றி கண்ணால் பார்த்து எரித்த சிவபெருமானது புத்தையை (மனதை) வெற்றி கொள்வதற்காக அவரை தன் வசமாக்கி அவரது இடப்பாகத்தை வலுக்கட்டாயமாக தன்னிச்சையாக கவர்ந்து கொண்டாய்.

**பலன்: உடல் அழகு மேம்படும், வசீகரத் தோற்றம்.**

அரவிந்தம் : தாமரை
இரதிபதி : காமன், மன்மதன்
வவ்வியதே : கவர்ந்ததே
சுந்தரவல்லி : அழகிய கொடி
வாமபாகம் : இடப்பாகம்

- தொடரும்



# பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆரோக்கிய குறிப்புகள்


### பதின்ம பருவம்

பதின்ம வயதிலிருக்கும் பெண்களுக்கு, மாதவிலக்கின் போது ஏற்படும் உதிர போக்கினால் இரும்பு சத்து அதிகம் தேவைப்படும். கீரை வகைகள், பேரிச்சம்பழம் போன்ற இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை தினசரி அவர்களது உணவில் சேர்க்க வேண்டும். இந்த வயதில் உளுந்து சாப்பிடுவது மிக முக்கியம், ஏனென்றால் அது இடுப்பெலும்பை வலுப்படுத்தும். மாதவிலக்கின்போது உடலை சுத்தமாக வைத்திருப்பது நல்லது. அந்நாட்களில் இரு வேளை குளிக்க வேண்டும், அதில் ஒரு முறை வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். குளியலும், சாம்பிராணியும் நல்லது.

### கர்ப்ப காலம்

கர்ப்பிணிப் பெண்கள், மற்ற பெண்களை விட அதிக சத்தான உணவுகளை உண்ண வேண்டும். ஒரு பெண் கர்ப்பமடையும்போது, தன்னை அவள் எப்படி வைத்துக் கொள்கிறாள் என்பது மிக முக்கியம்.

நமது பாரம்பரியத்தில் ஒரு கர்ப்பவதி மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில், அவள் மனதையும், உணர்வுகளையும் இனிமையாக வைத்திருக்கக் கூடிய நேர்மறையான விஷயங்கள் நிரம்பிய இடத்தில் வசிக்குமாறு பார்த்துக் கொள்கிறோம்.



இது போன்ற சூழ்நிலை தாய்க்கும் பிறக்கப் போகும் குழந்தைக்கும் மிகுந்த பலனைக் கொடுக்கும். இந்த சமயத்தில் எளிமையான யோகப் பயிற்சிகளைச் செய்வது மிகவும் நல்லது.



### குழந்தை வளர்ப்பில் கவனிக்க வேண்டியவை

சமைத்த உணவை 1½ மணி நேரத்திலிருந்து 4 மணி நேரத்துக்குள் சாப்பிட்டுவிட வேண்டும். இல்லையெனில் அந்த உணவு உடலில் மந்தத் தன்மையை உருவாக்கும். இதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி மற்றும் விழிப்புணர்வு பாதிக்கப்படும்.

8/9 வயதை அடைந்தவுடன் குழந்தைகளை அதிகாலையில் எழுப்புங்கள். ஏதாவது ஒரு செயல் செய்ய வையுங்கள். அசைவ உணவு கொடுப்பதை கூடிய மட்டும் தவிருங்கள்.

எப்போதும் புதிதாக தயாரிக்கப்பட்ட உணவுகளையே குழந்தைகளுக்கு கொடுங்கள். நிறைய காய்கறிகள், பழங்கள், முளை கட்டிய தானியங்களைக் கொடுப்பது அவர்களை இன்னும் அதிக துடிப்பானவர்களாக, உயிர்ப்புள்ளவர்களாக ஆக்கும். வெள்ளைப் பூசணியின் சாறெடுத்து தேன் கலந்து தினமும் உண்பது, வளரும் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த ஊட்டச்சத்து உணவாக இருக்கும். இதன் மூலம் அவர்களது கற்கும் திறனும், வளர்ச்சியும் மேம்படும். ஆஸ்துமா போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு வெள்ளை பூசணி தவிர்த்து விடலாம்.





குளிர்பானங்கள், செயற்கை சுவையூட்டிகள் மற்றும் நிறமூட்டிகள் கொண்ட மசாலா அடங்கிய உணவுகளை கடைகளில் வாங்கி உண்பதை குழந்தைகள் தவிர்க்க வேண்டும். நிறைய தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பெற்றோர் தம்முடைய கருத்துக்களை அவர்கள் மேல் திணிப்பதை விட்டுவிட்டு, குழந்தை தனது திறனை தானே கண்டறிய ஊக்குவிக்க வேண்டும்.

# யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,
# YALEY CHITFUNDS (P) LTD.,

GSTIN : 33AAACY0719M2Z9

Since 1986

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டுகள் நடத்தும் நிறுவனம்



தெய்வத்திரு
Dr. Lion.யாளி S.மதிவாணன்
நிறுவனர்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011.

Ph : 0424 - 2259007, 4020258 94431 28386 / Email : yaleychitfunds@gmail.com

**எமது பெருமை மிகு சீட்டு குருப்புகள்**

| மாதத் தவணை | மாதங்கள் | சீட்டு தொகை |
|---|---|---|
| ₹. 2,00,000 | 25 | ₹. 50,00,000 |
| ₹. 1,00,000 | 25 | ₹. 25,00,000 |
| ₹. 50,000 | 25 | ₹. 12,50,000 |
| ₹. 50,000 | 40 | ₹. 20,00,000 |
| ₹. 25,000 | 40 | ₹. 10,00,000 |
| ₹. 30,000 | 40 | ₹. 12,00,000 |
| ₹. 15,000 | 40 | ₹. 6,00,000 |
| ₹. 20,000 | 30 | ₹. 6,00,000 |
| ₹. 10,000 | 30 | ₹. 3,00,000 |
| ₹. 20,000 | 25 | ₹. 5,00,000 |
| ₹. 10,000 | 25 | ₹. 2,50,000 |
| ₹. 8,000 | 25 | ₹. 2,00,000 |
| ₹. 4,000 | 25 | ₹. 1,00,000 |

**JC பிரேம்சரண் மதிவாணன்**
நிர்வாக இயக்குநர்
94433 28386

புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு

94433 28701 | 94432 28731 | 94877 28386

தினசரி, வார மற்றும் மாத கலெக்ஷன்கள் உண்டு




தர்மபுரி மாவட்டம் இலளிகம் கிளை செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக (18–05–2021 முதல் 20–05–2021) ஆகிய மூன்று தினங்களில் தலா 500 நபர்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. இதனை ஊர் செட்டிகாரர் இல.ஆ.ரவிச்சந்திரன் ஊர் காரியக்காரர் இல.க.அருள் தலைமை தாங்கினார்கள். செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக இல.ப.தேவராஜன், ப.சின்னராஜ், இல.கோ.ஜம்புலிங்கம், பழனிச்சாமி, கதிர்வேல், சாம்பமூர்த்தி, ஞானேஸ்வரன், சுந்தரம், செல்வம், சி.விஜயகுமார் மற்றும் ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்




கடலூர் மாவட்டம் சி.என்.பாளையம் செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் கொடிய நோயான கொரோனாவிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திட ஏழாவது முறையாக கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்




கடலூர் தலைமை அரசு மருத்துவமனைக்கு உயிர் காக்கும் ஆக்சிசன் கருவிகளை 27.05.2021 அன்று கடலூர் திரு. S.மாரியப்பன் செங்குந்தர் அவர்கள் வழங்கினார்.



# கொரோனா நிவாரணப் பணியில் செங்குந்தர்கள்

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி கிளைச் சங்க செயலாளர் திரு P.S. முருகன் அவர்கள் 26.05.2021 அன்று சாலையோரம் வீடின்றி தங்கியிருக்கும் ஆதரவற்றவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கினார்.

# M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன்
## பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,
சென்னிமலை, ஈரோடு - 638 112.

**Phone : 04294 - 250242, 250220, 251617**
**E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in**



'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

**Counselling Code**
**2713**



'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

**B.E.**
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

**B.Tech. I.T.**

**M.E.**
- CAD / CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

**M.B.A**
**M.C.A**

Placement Record **394** Offers

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700, 73736 44088

# முயற்சி திருவினையாக்கும்!

ஒரு காட்டில் மரப்பொந்தில் கழுகு ஒன்று வாழ்ந்து வந்தது.

அந்தக் கழுகுக்கு இறைவனிடம் கண்மூடித்தனமான நம்பிக்கை. அதனால் அது அடிக்கடி ஒரு பாறை மீது அமர்ந்து தியானம் செய்துகொண்டிருக்கும். ஒருநாள் திடீரென்று

"இறைவனுக்கு நாம் தியானம் செய்வது தெரியுமா?" என்று சந்தேகம் வந்தது.

பின்னர் தானாகவே இறைவனுக்கு எல்லாம் தெரியும் என்று சமாதானம் செய்து கொண்டது.

ஒருநாள் அந்தக் கழுகு ""இன்று எனக்கு உணவு கிடைக்குமா? இறைவன்தான் எல்லோருக்கும் படியளப்பவன் ஆயிற்றே..." என்று யோசித்தது. உணவு கிடைக்குமா என்ற சந்தேகம் வந்ததும் அந்தக் கழுகு அமர்ந்து தியானம் செய்யும் பாறை மீது நின்று,

"இறைவா, இன்று எனக்கு உணவு கிடைக்குமா?" என்று பெரிய குரலெடுத்துக் கூவியது.

உடனே விண்ணிலிருந்து ஒரு குரல். "உனக்கு இன்று உணவு உண்டு" என்று பதில் கூறியது.

மிக்க மகிழ்ச்சியுடன் "இன்று இரை தேடும் வேலை இல்லை, எப்படியும் உணவு கிடைத்துவிடும்" என்ற நம்பிக்கையுடன் அந்தக் கழுகு பேசாமல் தியானம் செய்து கொண்டு அந்தப் பாறை மீது அமர்ந்திருந்தது.

நேரம் செல்லச்செல்ல கழுகுக்குப் பசி வரத் தொடங்கியது.

ஆனாலும் கண்களைத் திறக்காமல் இறை தியானத்திலேயே அமர்ந்திருந்தது. மதியம் ஆயிற்று, மாலையும் போயிற்று. இரவு வந்துவிட்டது.



""நம்மை இறைவனே ஏமாற்றிவிட்டாரே'' என்று மனம் வருந்தியபடி பாறையிலிருந்து புறப்படத் தயாரானது கழுகு.

அப்போது ஒரு குரல் கேட்டது. "என்ன குழந்தாய். சாப்பிட்டாயா?'' என்றதைக் கேட்டதும், கழுகுக்கு அழுகை வந்துவிட்டது.

"குழந்தாய் சற்று திரும்பிப் பார். உன் பின்னாலேயே உனக்கான உணவு இருக்கிறது "கழுகு பின்னால் சென்று பார்த்தது. அங்கே ஒரு பெரிய எலி இறந்துகிடந்தது. கழுகு புன்னகை புரிந்தது. இறைவனிடம், "இதனைக் காலம் தாழ்த்திக் கொடுத்தாயே இறைவா?'

இறைவன் பதிலளித்தார். "குழந்தாய், உனக்குரிய நேரத்தில் உணவு வந்துவிட்டது. நீதான் அதைத் தேடி எடுக்காமல் காலம் தாழ்த்திவிட்டாய்.

திரும்பிப் பார்க்கும் முயற்சிகூடச் செய்யாமல் உணவு எப்படிக் கிடைக்கும். "கடுகளவேனும் முயற்சி வேண்டும். ஒரு வேளை உணவுகூட உழைக்காமல் உண்ணக்கூடாது.

அப்போதுதான் இறைவனின் அருளையும் பெற முடியும்'' என்று கழுகுக்கு ஆசி கூறி மறைந்தார் இறைவன்.

அன்று முதல் கழுகு உழைப்பையே தியானமாக எண்ணிக் கடமையைச் செய்யத் தொடங்கியது.. தெய்வம் நம்பிக்கை எல்லோரிடமும் இருக்க வேண்டும். ஆனால், தெய்வத்தை நம்பியே ஒரே இடத்தில் இருந்து விடக்கூடாது.

முயற்சி இல்லாமல் எதுவும் கிடைப்பது இல்லை... உழைப்பவரை என்றும் வறுமை அண்டுவதில்லை. முயற்சி திருவினையாக்கும்.




## மழலைகளுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்






மே 25

**K.மகிழ் (எ) சுவர்ணசாம்பிகா**

பெற்றோர் :

**M.கார்த்திகேயன்**

**T.ஐஸ்வர்யா**

தாரமங்கலம்,

சேலம்.

# சேமியா அடை



**தேவையானவை:**

| | |
|---|---|
| சேமியா | - 100 கிராம் |
| கெட்டியான தயிர் | - 1 கப் |
| மைதா மாவு | - 150 கிராம் |
| பெரிய வெங்காயம் | - 1 |
| தக்காளி | - 1 |
| இஞ்சி விழுது | - 1 டீஸ்பூன் |
| பச்சை மிளகாய் | - 3 |
| கொத்தமல்லி இலை | - 1 கைப்பிடி |
| எண்ணெய், உப்பு | - தேவைக்கேற்ப |

**செய்முறை:**

வெங்காயம், தக்காளி, இஞ்சி, பச்சை மிளகாய், கறிவேப்பில்லை, கொத்த மல்லி இலையை பொடியாக நறுக்கவும்.

சேமியாவில் தயிரை ஊற்றி கிளறி கால் மணி நேரம் ஊற விடவும். பின்பு அதில் மைதா மாவினை சேர்த்து கிளறவும். அதில் உப்பு, பொடியாக நறுக்கிய வெங்காயம், தக்காளி, இஞ்சி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து நன்கு பிணைந்து கொள்ளவும். பிறகு சிறு உருண்டைகளாக செய்து கொள்ளவும்.

பிறகு தோசை கல்லை காய வைத்து, உருண்டையை அடையாக தட்டி, தோசைக் கல்லில் வைத்து, சுற்றி எண்ணெய் ஊற்றி இரு புறமும் வெந்ததும் எடுக்கவும். இதை சட்னி அல்லது சாஸுடன் சேர்த்து சாப்பிடலாம்.

சமைக்க.. ருசிக்க..

# சுண்டைக்காய் வற்றல் துவையல்

**தேவையானவை:**

| | |
|---|---|
| சுண்டைக்காய் வற்றல் | - 50 கிராம் |
| உளுத்தம் பருப்பு | - 25 கிராம் |
| மிளகாய் வத்தல் | - 3 |
| புளி | - சிறு உருண்டை |
| பெருங்காயப்பொடி | - 1 தேக்கரண்டி |
| எண்ணெய், உப்பு | - தேவைக்கேற்ப |



**செய்முறை:**

சுண்டைக்காய் வற்றலை எண்ணெய்விட்டு வறுத்துக் கொள்ளவும். மற்ற தாளித சாமான்களை வறுத்து சுண்டைக்காய் வற்றலோடு புளி, உப்பு, பெருங்காயம் சேர்த்து மிக்ஸியில் அரைத்தெடுக்கவும். பின்னர், சிறிது எண்ணெய்யில் வதக்கி சாப்பிட உடலுக்கு சத்தான துவையலாகும்.

# கும்பகோணம் நகர செங்குந்தர் கல்விச் சங்கக் கூட்டம்

கும்பகோணம் நகர செங்குந்தர் கல்விச் சங்கக் கூட்டம் 21–03–2021 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீ வெற்றிவேல்முருகன் ஆலயத்தில், தலைவர் S.சோலைமுத்து தலைமையிலும், செயலாளர் V.சுவாமிநாதன், பொருளாளர் தங்க.சுவாமிநாதன், மாவட்ட இளைஞரணி தாமரை மணிகண்டன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில சங்கம், மாவட்ட சங்கம், கிளைச் சங்கம் (கும்பகோணம்) வளர்ச்சி குறித்து ஆலோசனை நடைபெற்றது.

முதற்கட்டமாக மாநில சங்கத்தின் ஆயுள் உறுப்பினர் படிவங்கள் 25 தலைமை சங்கத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அடுத்து கும்பகோணம் நகர சங்க வளர்ச்சி குறிப்பாக நலத்திட்ட உதவிகள், பரிசளிப்பு விழா நடத்துவது பற்றியும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

மேற்கண்ட வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு கும்பகோணம் நகர சங்கத்தின் துணைப் பொறுப்பாளர்கள் நியமிக்கலாம் என முடிவு செய்யப்பட்டு துணைப் பொறுப்பாளர்களாக இணைத்தலைவராக L.கலியபெருமாள், துணைத்தலைவர்களாக T.மோகன், P.சிவக்குமார், P. விஸ்வநாதன், இணைச்செயலாளராக M.மாரிமுத்து, துணைச்செயலாளர்களாக S. தமிழரசன், P.கணேஷ்குமார், M.மணிகண்டன், இணைஞரணி அமைப்பாளராக B.கார்த்திக், துணை இளைஞரணி அமைப்பாளர்களாக R.ரஞ்சித்குமார், A.சதீஷ்குமார், இலக்கிய அணி துணை அமைப்பாளராக S.அருண் ஆகியோர் ஏகமனதாக நியமனம் செய்யப்பட்டார்கள்.



# செங்குந்தர்

• எண்ணங்கள் • ஆலோசனைகள் • சொந்தக்கருத்து

வளமான வாழ்வு தரும் வைகாசி மாதம் கட்டுரை படித்தேன். விசாகத்தில் உதித்த நம் குல வேலனை நினைத்து இல்லறத்தில் தான தர்மங்கள் செய்வது புண்ணியம் எனக் கூறும் பத்ம புராணம் விளக்கம் மிக அருமை. திருமூக்கிச்சரம் (உறையூர்) கோழியூர் என்ற பெயர் விளக்கம் அற்புதம். சிற்பங்களின் கலையழகை பார்த்து பார்த்து பரவசம் அடைந்தேன். பாராட்டுகள்.

**– நல்லாசிரியர் நா.வேலாயுதம்,** *சிதம்பரம்.*

•●✶●•

பாபநாசம் நகர செங்குந்தர் நல சங்க 13ம் ஆண்டு கல்வி ஊக்கப் பரிசளிப்பு விழா கட்டுரை – புகைப்படம் அருமை. தஞ்சை மாவட்டம் பாபநாசம் கல்வி ஊக்கப் பரிசளிப்பு விழா நேரில் சென்று பார்வை இட்டதுபோல் சிறப்பாக இருந்தது. நம் செங்குந்தர் ஆண்டு தோறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் விழா பார்த்து படித்து மகிழ்ந்தேன் நெகிழ்ந்தேன்.

**– பொன்.ராஜசேகரன்,** *ஆத்தூர்.*

•●✶●•

வாள் பெற்ற கைக்கோளர் என்பதால் போர் சிறந்த முறையில் செய்தனர் என்பதை பேராசிரியர் முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தன்னுடைய ஆராய்ச்சியால் கல்வெட்டுக்களில் 'கைக்கோளப் பெரும்படை' இடம்பெற்ற பாங்கினை சிறந்த முறையில் சொல்லியிருக்கிறார் இவரின் நுண்மான் புலமை நன்கு தெரிகிறது.

**– சித.வீரமணி,** *செம்பாக்கம்.*




செங்குந்தபுரம் உருவாக்கிய செங்குந்தர் குலச் செம்மல், ஊர் சிறக்கவே வாழ்ந்த தெய்வத்திரு A.E.செல்லக்குட்டி செங்குந்தர் 149வது பிறந்தநாள் சீரோடும் சிறப்போடும் அவ்வூர் சமூக பெருமக்கள் முன்னிலையில் நடந்தது கண்டு மகிழ்ச்சி அடையும் வண்ணம் செய்தது சிந்தையில் இன்பம் தரும் வகையில் அமைந்துள்ளது விழா புகைப்படம் செய்தி சிறப்பே சிறப்பு.

**– வே. ராஜமருதவாணன்,** *திட்டக்குடி.*

•●✶●•

விழிப்புணர்வு சிறுகதை அருமை. சீடர்கள் குரு உரையாடல் விழிப்புணர்வு விளக்கம் குரு. சல்லடையில் நீர் நிறப்புதல் முடியுமா. சீடர்கள் முயற்சி செய்து முடியவில்லை குரு சல்லடையை கிணற்றில் வீசிய போது நீர் நிறம்பியது என்னே வியப்பு விழிப்புணர்வு பெற நீண்ட முயற்சி வேண்டும் என்பதை விளக்கியது கதை சிறு செய்தி. பெரிய விளக்கம்.

**– ச.த.மனோகரன்,** *திட்டக்குடி.*

•●✶●•

வா.ரியார் அருளமுதம் சுவாமிகள் தனது வாழ்நாளில் முருகன் கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது அவரின் கொடை உள்ளம் கொண்ட பற்று அவரின் அருளமுதம் எத்தனை முறை பார்த்தாலும் நெஞ்சில் இன்பம் பொங்கும் மங்களம் பொங்கும் மங்கலம் தங்கும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பதே மிகவும் பெருமை.

– **ஆர்.பாலமுருகன்,** *ஆத்தூர், சேலம்.*

•●✶●•

திருமூக்கிச்சரம் (உறையூர்)பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில் ஆன்மீகக் கட்டுரை மிகவும் அருமை. வரகுண பாண்டியனால் 8ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட உறையூர் சிவாலயம் தல வரலாறு, கோயில் அமைப்பு, நேர்த்திக்கடன், வழிபாடு என கோயில் சிறப்பு நிகழ்வுகள் அனைத்தும் சிந்தாமல் சிதறாமல் பட்டியல் தந்து அகம் குளிரவைத்த உங்கள் ஆன்மீக பணிமென்மேலும் சிறக்க வேண்டும். மக்கள் மனம் சிலிர்க்க வேண்டும். உறையூர் ஈசன் வழிபாட்டு முறைகள் மூலம் நல்ல பல நன்மைகள் பெறவேண்டும்.

– **தி.க.வேல்முருகன்,** *திட்டக்குடி.*

•●✶●•

வளமான வாழ்வு தரும். வைகாசி விசாகம். வைகாசி மாதம் சிறப்பு தேவர்கள் துயர் தீர்க்க முக்கண்ணன் மகனாக முருகப் பெருமான் அவதரித்த மாதம் என்பதே தனிப்பெரும் சிறப்பு. முருகன் சூரனை கொன்று திருச்செந்தூரில் கோயில் கொண்டது விசாரித்ததில் தான். அனைத்து முருகன்கோவில் விசாக பெருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இன்று தானம் செய்ய எல்லா வளமும் நலமும் பெற்று வாழலாம் என்பது உண்மை. கந்தனை எண்ணி கருத்தில் கொண்டு வணங்கும் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழலாம்.

– **P.மதனகோபால்,** *பட்டுக்கோட்டை.*

நெசவு.. கவிதை அருமை. கவிஞர். சி.விநாயகமூர்த்தி அவர்கள் எளிய இனிய நடையில் நம் குலத்தொழில் நெசவு என்பதை மிகவும் நுணுக்கமாக நுட்பமாக தொழில்நுட்ப பாணியில் அழகாக சொல்லியது அருமை. அழகு சத்தம் நாட்டின் சொந்தம் என்று சொல்லியது சிறந்த முறையில் கவிதை உள்ளது. தமிழ்க் கவிதை தேன் குடித்தேன் நெகிழ்ந்தேன் மகிழ்ந்தேன். நெசவு கவிதை என் மனதில் இன்பம் பெறுக வைத்தது.

– **கே. கந்தசுப்ரமணியன்,** *கூடுவாஞ்சேரி.*

•●✶●•

எழுச்சி மிகுந்த ஏப்ரல் மாதம்.. கவிதை அருமை. கவிஞர் அ.முத்துசாமி. தாரமங்கலம் அவர்கள் தன் தேன் தமிழில் கருத்து சுவையும் ஆழ்ந்த பொருள் சுவையும் மிக்க பூங்காற்று தெள்ளு தேன்பாகு என இனிப்பாய் இனித்தது. மேனாள் தலைவர் நாச்சிமுத்து செங்குந்தர், புரட்சி கவிஞர் பாரதிதாசன், வள்ளல் சபாபதி முதலியார் இவர்கள் மூவரையும் பாட்டில் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பிறந்தநாள் மாதம் ஏப்ரல் என்பது கூறி எண்ணங்கள் தோறும் மகிழ்ச்சி அடையும் வண்ணம் செய்தது அருமை.

– **கே.ஆளவந்தான்,** *சின்னசேலம்.*

•●✶●•

திங்கள் ஒரு திருக்குறள் அருமை. சிவன்மலை பித்தன் நடராஜன் அவர்கள் கருத்தோவியம் சிறப்பு. தன்னையே கொள்ளும் சினம் எனகூறியது மிகவும் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது குறள் கருத்தும்.ஓவியமும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்பதை கூற வேண்டும். அவர்கள் தமிழ் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

– **வேல். வெற்றிவேந்தன்,** *திட்டக்குடி.*

•●✶●•

# வருந்துகிறோம்



தெய்வத்திரு **மா.கன்னையா முதலியார்** அவர்களது மகனும் மதுரை செல்லூர் மண்டல மாணிக்கம் செங்குந்த உறவின்முறை மூத்த உறுப்பினர் **திரு. மா.முருகேசன் செங்குந்தர்** அவர்கள் 01.05.2021 அன்று காலமானார்.



திருப்பத்தூர் மாவட்ட தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினரும், வேலூர் மாவட்ட வாரியார் கல்வி / மருத்துவ அறக்கட்டளை வள்ளலுமாகிய நல்லாசிரியர் **திரு. L.T.மோகன் செங்குந்தர்** அவர்கள் 03.05.2021 அன்று காலமானார்.



**தெய்வத்திரு மா.கன்னையா முருகேசன்** அவர்களது துணைவியார் **திருமதி. வாசுகி முருகேசன்** அவர்கள் 06.05.2021 அன்று காலமானார்.



புதுச்சேரி செங்குந்தர் கல்வி நலச் சங்கத்தின் உறுப்பினர் **திரு. வ.சுந்தரேசன்** அவர்கள் 06.05.2021 அன்று காலமானார்.



திருப்பூர் மாவட்டம் உடுமலை செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னாள் செயலாளரும், **தெய்வத்திரு. கருப்பண செங்குந்தர்** மகனுமாகிய **திரு.க.பாலகிருஷ்ணன் செங்குந்தர்** அவர்கள் 09.05.2021 அன்று காலமானார்.



கடலூர் மாவட்டம், காராமணிக்குப்பம், செங்குந்த மகாஜன சங்கத்தின் உறுப்பினரும், கால்நடை ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவருமான **திரு. வை. உருத்திராபதி செங்குந்தர்** அவர்கள் 11-05-2021 அன்று காலமானார்

இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வருந்துகிறோம்



சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **திரு. D. ஆறுமுகம் செங்குந்தர்** அவர்களின் மூத்தமகன் **திரு. A. ஆனந்தன்** அவர்கள் 13-05-2021 அன்று காலமானார்



நாமக்கல் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைமைச் சங்கச் செயற்குழு உறுப்பினர் பாச்சல் **திரு. C.K.சுகுமார் செங்குந்தர்** அவர்கள் 16.05.2021 அன்று காலமானார்.



கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் **திரு.அ.ராஜேந்திரன்** அவர்களின் சகோதரியும், **திரு. V. சதிஸ்குமார்** அவர்களின் துணைவியாருமான **திருமதி. S.பூங்கோதை** அவர்கள் 22.05.2021 அன்று காலமானார்.



செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமைச் சங்கச் செயற்குழு உறுப்பினர் **திரு. R. இராதாகிருஷ்ணன்** அவர்களின் தாயார் **திருமதி R.சரோஜா அம்மாள்** அவர்கள் 24.05.2021 அன்று காலமானார்.



காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைமைச் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினர் **திரு. K.குமரவேல் செங்குந்தர்** அவர்களின் தாயார் **திருமதி K.தனலட்சுமி அம்மாள்** அவர்கள் 25.05.2021 அன்று காலமானார்.



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், புதுவைச் செங்குந்தர் கல்வி நலச் சங்கத்தின் துணைச் செயலாளரும், புதுச்சேரி நகர செங்குந்தர் சங்கத்தின் செயலாளருமான **திரு. R.T.கண்ணன் செங்குந்தர்** அவர்களின் தாயார் **திருமதி. T.கமலம் அம்மாள்** அவர்கள் 28.05.2021 அன்று காலமானார்.

இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# புடலங்காய் நன்மைகள்

நாம் தினந்தோறும் சாப்பிடும் மதிய மற்றும் இரவு உணவுகளில் காய்கள் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். நமது உடலுக்கு நன்மை தரும் பலவகையான காய்கள் நமது நாட்டில் விளைகின்றன. அதில் ஒன்று தான் புடலங்காய். புடலங்காய் சாப்பிடுவதால் நமக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

## ஜுரம்

ஜுரம் என்பது பொதுவாக உடலின் சராசரியான வெப்பநிலையை அதிகரிக்க செய்து உடலை பலவீனமாக்கி செயல்பட முடியாமல் செய்து விடும் ஒரு நோயாகும். ஜுரங்களில் டைபாய்டு, வைரல் சுரம் மற்றும் மலேரியா நோயால் ஏற்படும் ஜுரத்தின் போது தினமும் சிறிதளவு புடலங்காயை பக்குவப்படுத்தி சாப்பிட்டு வந்தால் எப்படிப்பட்ட ஜுரம் நோய்களும் நீங்கும்.

## மலச்சிக்கல்

பலருக்கும் காலை நேரத்தில் மலச்சிக்கல் காரணமாக மலம் சரியாக கழிக்க முடியாமல் உடல் மற்றும் மனஅளவில் மிகுந்த அவஸ்தையை ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்ட தீவிரமான மலச்சிக்கல் பிரச்சனை தீர தினமும் புடலங்காய் பொரியல், கூட்டு போன்றவற்றை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் பிரச்சனை சுலபத்தில் நீங்கும்.

## இதயம்

நமது உடலின் முக்கிய உறுப்பான இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருந்தாலும், இதயத்திற்கு நலத்தை தருகின்ற உணவுகள் மற்றும் மூலிகைகளை சாப்பிட்டு வருவது நல்லது. தினமும் ஒரு வேளையாவது புடலங்காய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிடும் நபர்களுக்கு ரத்த அழுத்தம் வெகுவாக குறைந்து, இதயம் சம்பந்தமான நோய்கள், பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கிறது.



## சர்க்கரை வியாதி

ஒரு மனிதனின் பரம்பரை காரணமாகவும் மற்றும் அவனது தவறான உணவு பழக்கங்களாலும் நீரிழிவு எனப்படும் சர்க்கரை வியாதி ஏற்படுகிறது. சர்க்கரை வியாதி உள்ளவர்கள் அடிக்கடி புடலங்காய் சாப்பிட்டு வந்தால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சரியாக வைப்பதோடு, நீரிழிவு நோயாளிகளின், சிறுநீரில் அதிகளவு சர்க்கரை சத்துகள் வெளியேறாமல் தடுக்கிறது.

## தலைமுடி

தலைமுடி கொட்டுதல், பித்த நரை அல்லது இளநரை, பொடுகு, வழுக்கை ஏற்படுவது போன்ற தலைமுடி சார்ந்த பிரச்சனைகள் ஏராளம் இருக்கின்றன. மேற்சொன்ன பிரச்சனைகள் இருப்பவர்கள்

வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு முறையாவது புடலங்காய் உணவுகளை சாப்பிட்டு வந்தால் தலைமுடி சார்ந்த அத்தனை பிரச்சனைகளும் குணமாகும்.

## உடல் சூட்டைக் குறைக்கும்

உடல் உஷ்ணம் அதிகரிக்கும் போது குறிப்பாக ஆண்களுக்கு, அவர்களின் விந்தணுக்கள் குறைத்து மலட்டுத்தன்மை ஏற்படுகின்றன வாய்ப்புகள் அதிகமாகின்றன. புடலங்காய் குளிர்ச்சி தன்மை நிறைந்த ஒரு காய் வகையாகும். தினமும் இதை சாப்பிடும் ஆண்களுக்கு விந்தணுக்கள் பெருக்கம் ஏற்பட்டு மலட்டுத்தன்மை நீங்கும். நோய் எதிர்ப்பு எத்தகைய ஒரு நோயையும் எதிர்த்து நின்று, உடல்நலனை பாதுகாப்பதில் உடலின் ரத்தத்தில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி வலிமையாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்களின் நோய் எதிர்ப்பு சக்தி வீரியமிக்கதாக இருக்க வாரத்திற்கு இரண்டு முறையாவது புடலங்காய் உணவுகளை சாப்பிடுவதால் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை பெறலாம்.

## உடல் எடை குறைப்பு

அளவுக்கதிகமாக உடல் எடை கூடியவர்கள் அதிக எடையை குறைக்க பல வகையான இயற்கை உணவுகளை சாப்பிடுவது அவசியம். உடலில் கொழுப்பு படியாமல் தடுத்து உடல் எடையை சீக்கிரம் குறைப்பதில் புடலங்காய் சிறப்பாக பணியாற்றுகிறது.

இதில் இருக்கும் சத்துகள் உடலின் அதீத பசியுணர்வை கட்டுப்படுத்தி, நீர் சுரப்பை அதிகப்படுத்தி உடல் எடையை குறைப்பதில் பேருதவி புரிகிறது.

# வருந்துகிறோம்



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் தெய்வத்திரு.
**பத்மஸ்ரீ M.P.நாச்சிமுத்து செங்குந்தர்**
அவர்களின் மகன்
**திரு. M.P.N.ஆறுமுகம் செங்குந்தர்**
அவர்கள் 26.05.2021 அன்று காலமானார்.



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் **திரு. பெண்ணாடம் ஆ. ராஜவேலு** அவர்களின் உடன்பிறந்த தம்பியும் பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலை மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் உடற்பயிற்சி ஆசிரியருமான
**திரு. ஆ.கணேசன் செங்குந்தர்** அவர்கள் கடந்த 14.5.2021 ல் இயற்கை எய்தினார்.

இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

## தலைமைச் சங்க நிர்வாகிகள் (2020 – 2023)

### தலைவர்



**திரு. K.P.K.செல்வராஜ்,**
20, பெத்தி செட்டிபுரம் கிழக்கு
2வது வீதி, திருப்பூர் – 641601.
செல்: **98430 43590**

### பொதுச்செயலாளர்



**திரு. R.P.குமரகுருபரன்**
61, சந்தானம் தெரு,
V.G.P. புஷ்பா நகர், மேடவாக்கம்,
சென்னை – 600100.
செல்: **91766 90404**

### பொருளாளர்



**திரு. R.காந்தி**
10, பழைய அக்ரஹாரம் தெரு,
சின்ன சொக்கிகுளம்,
மதுரை – 625 002.
செல்: **99943 75599**

### துணைப் பொதுச்செயலாளர்



**திரு. K.சுந்தரமூர்த்தி**
கெஜலட்சுமி பிளாட்ஸ்,
2/11, K.K. நகர் மெயின் ரோடு,
கொளத்தூர், சென்னை– 600 099.
செல்: **98406 11567**

### துணைத் தலைவர்கள்



**திரு. C.N.தட்சணாமூர்த்தி**
114/44F, நரிமுருகப்ப முதலி தெரு,
பிச்சனூர், குடியாத்தம் – 632 602.
கைபேசி: **94439 64556**



**திரு. மெட்டல் M.மணி**
76, VCV லே அவுட், R.S.புரம்,
கோயம்புத்தூர் – 641 002.
செல்: **94437 16040**



**திரு. P.மாரிமுத்து**
அனுசுயா ஜீவல்லரி
52, மெயின் ரோடு
சங்கரன்கோயில் – 627 756
செல்: **98421 26568**



**திரு. A.பாலதண்டபாணி**
1/311–1, செங்குந்தர் நகர்,
செங்குந்தர் பொறியியல் கல்லூரி,
மண்டகப்பாளையம் – 637 205.
திருச்செங்கோடு.
கைபேசி: **98427 53349**



**திரு. C.கார்த்திகேயன்**
219/18, Kavyam
Hari Shankar Road,
Tharekkad, Palakkad - 678 001
Kerala State
செல்: **070341 40659**



**திரு. P.G.செல்வராஜ்**
5-4-144, S.V. Koil Street
Ekambarakuppam-517 592
Nagari Mandal,
Chittoor Dist (A.P)
செல்: **94402 70600**

### செயலாளர்கள்



**திரு. சீனி. கார்த்திகேயன்**
42/73, இராஜராஜன் தெரு,
திருவண்ணாமலை – 606 601.
கைபேசி: **97512 99999**



**திரு. து.ப.புனிதம்**
6, 6வது தெரு,
செங்குந்தபுரம் – 621 802.
அரியலூர் மாவட்டம்.
செல்: **83441 69855**



**திரு. க.பாலசுப்ரமணியம்**
12/33A, ரெகுநாதபுரம் கிழக்கு,
தேவக்கோட்டை – 630 302.
சிவகங்கை மாவட்டம்.
செல்: **97887 86878**



**திரு. M.உதயசங்கர்**
551/3, சங்கமம் வீதி,
காமராஜ் நகர்,
பவானி – 638 301.
செல்: **98426 92234**




**திரு. R.கந்தசாமி**
No. 231, 1st Main, 3rd Croos,
KSTRC Layout,
J P Nagar 2nd Phase,
Bangalore - 560 078.
செல்: **098450 29016**



**திரு. ப.இராஜாக்கண்ணு**
2, தமிழ் இல்லம், பாரதி வீதி,
சாந்தி நகர், இலாசுப்பேட்டை
புதுச்சேரி – 605 008.
செல்: **94422 33381**


Printed by T.Parvathi, Published by **K.P.K.Selvaraj** on behalf of **South Indian Sengundha Mahajana Sangam**
Printed at: Arul Vinayaga Fine Arts, 5/158, Samipuram Colony, Sivakasi - 626 189.
Published from 58, Armenian Street, Chennai - 600 001. Editor: **K.P.K.Selvaraj**



# உங்கள் கிட்னி நல்லா இருக்கிறதா? டயாலிஸஸ் செய்யாமல் பாதுகாப்பது எப்படி?

சர்க்கரை நோய், அதிக இரத்த அழுத்தம் (HBP), புகைபிடித்தல், மது அருந்துதல், வயதில் முதியவர்கள், அதிக உடற்பருமன் போன்ற குறைகள் உள்ளவர்கள்தான் அதிக அளவில் சிறுநீரகக் கோளாறுகளுக்கு ஆளாகின்றனர்.

சிறுநீரகக் கோளாறுகளுக்கு காரணங்கள்: மனஅழுத்தம், கவலை, அதிக BP மற்றும் சர்க்கரையின் அளவு அதிகமாக இருத்தல், வலி நிவாரண மருந்துகளை அதிகமாக சாப்பிடுதல், சிறுநீரகங்களில் நீர்கட்டிகள், அதிக புரதச்சத்துக்கள் உள்ள (animal protein) மற்றும் பொட்டாசியம் நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல், கிருமிகளால் சிறுநீரகங்கள் தாக்கப்படுதல், மேலும் ஆட்டோ இம்மியூன் நோய்களாலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுகின்றன. பாதித்த பிறகும் உப்பு, காரம், மசாலா பொருள்கள், மற்றும் உணவுக்கட்டுப்பாடு இல்லாமல் உண்பதாலும், மற்றும் சிறுநீரகங்களில் கற்கள் உருவாவதாலும் கட்டிகள் ஏற்படுவதாலும், பரம்பரை நோய்களாலும் கூட சிறுநீரகங்கள் செயல் இழந்து பாதிப்பு அடைகின்றன.

சிறுநீரகக் கோளாறுக்கான அறிகுறிகள் : முகம், கை, கால்களில் வீக்கம், அடிக்கடி விக்கல் ஏற்படுதல், பசியின்மை, அஜீரணம், வாந்தி, குமட்டல், உடலில் அரிப்பு, மயக்கம், தலைவலி, இரத்தசோகை, மலச்சிக்கல், நுரையுடன் சிறுநீர் கழித்தல், கை, கால்கள் நரம்பு வலியுடன் (cramp) இழுத்தல், உடல் எடை குறைதல், உடல் சோர்வு, கோபம் ஏற்படுதல், நாவறட்சி, இடுப்புவலி போன்ற உடல்நலக் குறைவுகளை சிறுநீரகங்களின் கோளாறுகள் என அறியலாம். மேலும் இரத்தத்தில் யூரியா, கிரியேட்டினைன், யூரிக் ஆசிட் அதிகமாகுதல் மூலமாகவும் பாதிப்பை அறியலாம். அதாவது சிறுநீரை நார்மலாக வெளியேற்ற முடியாமல் சிறுநீரகங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அடைபட்டும், சுருங்கியும் விடுகின்றன. இதனையே சிறுநிரகக் கோளாறு (Kidney Failure) என்கிறோம். இதுபோன்ற குறைகளுக்கு ஆரம்ப காலத்திலேயே இதனை உணர்ந்து தக்க சிகிச்சை எடுப்பதன் மூலம் நல்ல நிவாரணம் பெற்று சிறுநீரகக் கோளாறிலிருந்து விடுபெறலாம். மேலும் ஆலோசனைக்கும் பின்விளைவோ பக்க விளைவோ ஏற்படுத்தாத நலமூலிகை மருந்தினைப் பெறவும் அணுகவும்.


NATURE CURE
GINRC-INDIA

**Dr.T.ASHOK KUMAR, M.D. (Ayurveda), M.Sc., (Yoga)**
**GANDHIJI NATURE CURE CENTRE**
No.2C, Mandhia Apt (2nd Floor), 53, North Boag Road,
(Opp. State Bank of India), T.Nagar, Chennai – 600 017.
**Phone : 9444041062, 9444631778 | www.gandhijinaturecure.com**




தகவல்: பொதுவாக Creatinine 1.2 அளவு நார்மல் ஆகும். இந்த அளவுக்கு மேல் இருக்கும்போதே சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்பதை உணர்ந்து தக்க மருத்துவ ஆலோசனைப் பெற வேண்டும். ஆயுர்வேத மருந்துகள், இயற்கை உணவுகள், உணவு முறைகள், சூரியக்குளியல், உடற்பயிற்சி, இவைகளால் சிறந்த முறையில் உடல்நலக்குறைகள் நீங்கி நல்ல நிவாரணத்தை பெறமுடியும்.

குறிப்பு: மற்றும் சர்க்கரைநோய், சரும நோய்கள், புற்றுநோய், மூலம், பௌத்திரம், அல்சர், தைராய்டு பிரச்சினைகள், உடற்பருமன், தலைமுடி உதிர்தல், மூட்டுவலி, மனஅழுத்தம், BP, இரத்தசோகை, இருதயநோய்கள், கருப்பை, சினைப்பைக் கோளாறுகள், வெள்ளைப்படுதல், மற்றும் குழந்தைகளுக்கான ஞாபகசக்திப் பெறவும் சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படும்.




**GINRC - INDIA MEDICAL FOUNDATION**
(Regd. Trust)
Managing Trustee
**Dr.J.V.G. SEKAR, BA., LLB., PGDUMS,**

**GANDHI INSTITUTE OF YOGA & NATUROPATHY**
Correspondent & Trustee
**DR. MADHURAM SEKAR, MA, DUMS, DHN**

எங்களுடைய புத்தகங்களான: இல்லந்தோறும் இயற்கை உணவுகள்,
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், HEALTH AND NATURE வாங்கி படித்தும் பயன் பெறலாம்.




செங்குந்த மித்திரன்
மே 2021
60
REGISTERED_REGISTRATION NO. TN/CNIGPO/222/2021-2023
Registrar of Newspapers for India No. TNTAM/2000/03982
Due Date of Posting 25th - 30th of Every Month.
TO POST WPP No.TN/PMG(CCR)/WPP109/2021-2023
Date of Publication 25th day of Every Month.
Posted at Egmore R.M.S. Patrika Channel, Chennai - 600008.
If undelivered, Please return to: Senguntha Mithiran, South Indian Sengunthar Mahajana Sangam, 58, Armenian Street, Chennai - 600 001.

